அல்லாஹ்வின் கட்டளை

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تُبْطِلُوْا صَدَقٰتِكُمْ بِالْمَنِّ وَالْاَذٰى

நம்பிக்கை கொண்டவர்களே! மக்களுக்கு காட்டுவதற்காகவோ அல்லது துன்பம் கொடுப்பதற்காவோ உங்களது செல்வத்தைச் செலவு செய்து உங்கள் தருமங்களை வீணாக்காதீர்கள். (2:265)

بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 35

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

18 ஸுல்ஹஜ் 1439 ஹிஜ்ரி கமரி 30 ஸஹுர் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

30 ஆகஸ்ட் 2018


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்**

**எல்லாப் புகழுக்கும் உரிமையானவன் இறைவனேயாவான். அவனது ஆட்சியில் எந்தக் குறைபாடும் இல்லை.**

**மேலும் அவனது சிறப்புகளிருந்து ஏதாவது கிடைப்பதற்கு இன்று இல்லை; நாளைதான் கிடைக்கும் என எதிர்பார்க்கும் நிலை இல்லை. அவனது ஆட்சிக்குத் தேவைப்படும் பொருள்களில் எதுவும் செயல்பட முடியாமலில்லை. அவன் அனைத்து உலகங்களையும் பரிபாலித்து வருகிறான்**

**அவன் எவ்வித முயற்சியுமின்றி அருட்கொடையை வழங்குகின்றான்; மேலும் முயற்சியின் பிரதிபலனாகவும் அருட்கொடையை வழங்குகின்றான். நன்மை தீமைகளின் பிரதிபலனையும் தக்க சமயத்தில் வழங்குகிறான்**

**நாம் அவனையே வணங்குகிறோம். அவனிடமே உதவி தேடுகிறோம். மேலும் எல்லா அருட்கொடைகளின் பாதைகளையும் நீ எங்களுக்குக் காட்டித் தருவாயாக. கோபம், வழிகேடு இவற்றின் பாதைகளிலிருந்து நீ எங்களைத் தூரமாக்குவாயாக என்று துஆ செய்கிறோம்**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் (நூஹ் நபியின் கப்பல்) என்ற நூலிலிருந்து...**

ஆயினும் மஸீஹ் தாம் தப்பித்துக் கொள்வதற்காக வேண்டி தோட்டத்தில் இரவு முழுவதும் பிரார்த்தனை செய்வதும் எபிரேயர் 5:7 ல் குறிப்பிட்டிப்பது போல் அப்பிரார்த்தனையானது ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தும் இறைவன் அவரை விடுவிப்பதில் சக்தி அற்றவனாய் போனதும் ஆகிய இவையெல்லாம் கிறித்தவர்களின் கட்டளைப்படி, அக்காலத்தில் இறை ஆட்சி பூமியில் உண்டாகவில்லை என்பதற்கு ஓர் ஆதாரமாக இருக்கலாம்.

ஆனால் நாம் இதையும் விட அதிகமாக சோதனைகளை கண்டு இருக்கின்றோம். அவற்றிலிருந்து மீட்பும் அடைந்திருக்கின்றோம். இவ்வாறிருக்க நாம் இறைவனது ஆட்சியை எவ்வாறு மறுக்க முடியும்? யூதர்களின் சார்பாக நீதிபதி பிலாத்துக்கு முன் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது மார்க்க சம்பந்தமான காரணங்களினால் மாத்திரம் தாக்கல் செய்யப்பட்டதே தவிர ஏதும் கொலை குற்றத்திற்காகத் தாக்கல் செய்யப்பட்டதல்ல.

இவ்வழக்கைவிட நான் கொலை செய்யப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் என் மீது மார்டின் கிளார்க் சார்பாக நீதிபதி டாக்லஸுக்கு முன் தொடரப்பட்ட கொலை வழக்கு இவ்வழக்கை விடக் குறைந்த நிலையிலுள்ளதா? ஆனால் இறைவன் வானத்திற்கு அரசனாய் இருப்பது போல் பூமிக்கும் அரசனாய் இருப்பதால் இவ்வழக்கை என்மீது தொடரப்படுவதற்கு முன்பாகவே இது போன்ற ஒரு சோதனை வரப்போறிறது என்றும் பின்னர் இந்த சோதனையிலிருந்து நான் விடுவிக்கப்படுவேன் என்றும் இறைவன் எனக்கு அறிவித்திருந்தான்.

இச்சம்பவம் நடைபெறுவதற்கு முன்பே நூற்றுக்கணக்கான மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இறுதியில் நான் நிரபராதியான நிலையில் விடுவிக்கப்பட்டேன். ஆகவே முஸ்லிம்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் ஆகியவர்கள் ஒன்றிணைந்து என் மீது தொடரப்பட்ட இவ்வழக்கிலிருந்து என்னைக் காப்பாற்றியது இந்த இறைவனின் ஆட்சியேயாகும். இவ்வாறு ஒருமுறை அல்ல. பலமுறை பூமியில் இறைவனது ஆட்சியை நான் பார்த்திருக்கின்றேன்.

لَهٗ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ

அதாவது பூமியிலும் வானங்களிலும் இறைவனின் ஆட்சி இருந்து வருகிறது என்ற இந்த வசனத்தின் மீது நான் நம்பிக்கை கொள்ள நேர்ந்தது. (57:3)

اِنَّمَاۤ اَمْرُهٗۤ اِذَاۤ اَرَادَ شَيْـًٔا اَنْ يَّقُوْلَ لَهٗ كُنْ فَيَكُوْنُ

அதாவது பூமி வானம் ஆகிய அனைத்தும் அவனுக்குக் கீழ்ப்படிகின்றன. ஏதாவதொரு பணியை அவன் விரும்பினால் அதனை ஆகிவிடு என்று கூறியதுமே அப்பணி உடனே ஆகி விடுகிறது என்ற வசனத்தின் மீதும் எனக்கு நம்பிக்கை கொள்ள நேர்ந்தது. (36:83)

وَاللّٰهُ غَالِبٌ عَلٰۤى اَمْرِهٖ وَلٰـكِنَّ اَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُوْنَ

அதாவது இறைவன் தனது நாட்டத்தில் வெற்றி பெறக் கூடியவனாயிருக்கிறான். ஆனால் பெரும்பாலானவர்கள் அவனது பேராண்மையைப் பற்றி அறியாதவர்களாகவே இருக்கிறார்கள். (12:22)

சுருக்கமாக, பைபிளின் புதிய ஏற்பாட்டின் பிரார்த்தனை இறைவனின் அருட்கொடைகளின் மீது மக்களை நம்பிக்கை இழக்கச் செய்கிறது. மேலும் அவனது பண்புகளாகிய பரிபாலித்தல், அருட்கொடையை அளித்தல், நன்மை தீமைகளுக்குப் பிரதிபலன் அளித்தல் ஆகியவைகளிலிருந்தும் கிறிஸ்தவர்களை அலட்சியப்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் முன்ஸிர் பின் முஹம்மது அன்ஸாரி (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹாத்திப் பின் அபீ பல்தஆ (ரலி) ஆகிய சஹாபாக்களின் வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்

**அல்லாஹ் இந்த சஹாபாக்களின் சிறப்பம்சங்களைப் பேணக்கூடியவர்களாக நம்மை ஆக்குவானாக. மேலும் அவர்களது அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக.**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 27 ஜுலை 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **வஃபா** மாதம் **27 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

சஹாபாக்களின் குறிப்புகளின் வரிசையில் இன்று நான் இரண்டு சஹாபாக்களைப் பற்றி கூறுவேன். முதலாவது சஹாபி, ஹஸ்ரத் முன்ஸிர் பின் முஹம்மது அன்ஸாரி ஆவார்கள்.

ஹஸ்ரத் முன்ஸிர் பின் முஹம்மது அவர்கள் பனூ ஜஹ்ஜபா கோத்திரத்தைச் சார்ந்தவராவார். அன்னார் மதீனாவிற்கு வருகை தந்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முன்ஸிர் பின் முஹம்மது அவர்களுக்கும் ஹஸ்ரத் துஃபல் பின் ஹாரிஸ் அவர்களுக்கும் இடையில் சகோதரத்துவ பந்தத்தை நிலைநாட்டினார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 248, முன்ஸிர் பின் முஹம்மது (ரலி) – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸுல் அரபீயில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் (ரலி) அவாம், ஹஸ்ரத் ஹாத்திப் பின் அபீ பல்தஆ மற்றும் ஹஸ்ரத் அபூ ஸப்ரா பின் அபி ருஹ்ம் ஆகியோர் மக்காவிலிருந்து மதீனா ஹிஜ்ரத் செய்து வந்த பிறகு அவர்கள் ஹஸ்ரத் முன்ஸிர் பின் முஹம்மது அவர்களின் வீட்டில் தங்கினார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 55, சுபைர் பின் அல்அவாம் (ரலி) பக்கம் 61, ஹாத்திப் பின் அபீ பல்தஆ (ரலி) பக்கம் 215, அபூ ஸப்ரா பின் அபீ ருஹ்ம் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸுல் அரபீயில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முன்ஸிர் பின் முஹம்மது அவர்கள் பத்ர் மற்றும் உஹது போரில் பங்கு பெற்றார்கள். பேரே மஃமூனா சம்பவத்தில் ஷஹீதானார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 248, முன்ஸிர் பின் முஹம்மது (ரலி) – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸுல் அரபீயில் அச்சிடப்பட்டது)

பேரே மவூனாவைப் பற்றி இதற்கு முன்னரும் கூறப்பட்டுள்ளது. மீண்டும் ஒரு முறை கூறி விடுகிறேன். ஹஸ்ரத் முன்ஸிர் பின் முஹம்மது அவர்களின் ஷஹாதத் சம்பவம் பற்றி ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற புத்தகத்தில் இவ்வாறு உள்ளது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி நான்காம் ஆண்டு ஸஃபர் மாதத்தில் முன்ஸிர் பின் அம்ர் அன்ஸாரி சஹாபியின் தலைமையில் சஹாபாக்களின் ஒரு குழுவை அனுப்பி வைத்தார்கள். இந்த மக்கள் பெரும்பாலும் அன்ஸாரை சார்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்களின் எண்ணிக்கை எழுபதாக இருந்தது. அனைவருமே காரியாக இருந்தார்கள். அதாவது திருக்குர்ஆனை ஓதக்கூடியவர்களாக இருந்தார்கள். அவர்கள் பகல் பொழுதில் காட்டிலிருந்து விறகுகளைச் சேகரிப்பார்கள். பின்னர் அதனை விலைக்கு விற்று அதன் மூலம் வாழ்க்கை நடத்தினர். இரவின் பெரும் பகுதியை இறை வணக்கத்தில் கழிப்பார்கள். இவர்கள் பேரே மவூனா என்ற இடத்தை அடைந்தார்கள். அங்கு நடந்த சம்பவத்தின் காரணமாக பேரே மஃமூனா என்ற இடம் மிகப் பிரபல்யமானது.

அவர்களில் ஒருவர் ஹராம் பின் மில்ஹான் ஆவார். அவர் அனஸ் பின் மாலிக் அவர்களின் மாமாவாக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புறமிருந்து இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எடுத்துக் கொண்டு அமீர் பின் துஃபைல் மற்றும் அவரின் நண்பர்களிடத்தில் சென்றார்கள்.

மற்ற சஹாபாக்கள் பின்தங்கி இருந்தார்கள். ஹராம் பின் மில்ஹான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதராக ஆமர் பின் துஃபல்ல் மற்றும் அவரது நண்பர்களிடத்தில் சென்றடைந்தார்கள். அப்போது அந்த மக்கள் முதலில் நயவஞ்சகத்தனமாக மிகவும் வரவேற்றார்கள்.

இஸ்லாத்தின் தூதுச் செய்தியைக் கொண்டு சென்றவர்கள் ஆறுதல் அடைந்து அமர்ந்து இஸ்லாத்தின் பிரச்சாரத்தைத் துவங்கிய போது அவர்களில் சில தீயவர்கள் ஒரு நபருக்கு சைகை செய்தார்கள். அவர்கள் அந்த அப்பாவியான தூதரை பின் புறமிருந்து வாளினால் தாக்கி அங்கேயே சாய்த்து விட்டனர். அப்போது ஹராம் பின் மில்ஹானுடைய நாவிலிருந்து காயமடைந்த நிலையில் இவ்வாறு வார்த்தைகள் வெளிப்பட்டன:

اَللّٰهُ أَكْبَرُ فُزْتُ وَرَبِّ الْكَعْبَةِ அதாவது அல்லாஹ் மிகப்பெரியவன். கஅபாவின் ரப்பின் மீது ஆணையாக! நான் எனது நோக்கத்தை அடைந்து விட்டேன்.

ஆமிர் பின் துஃபல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுவரை கொலை செய்ததில் திருப்தியடைந்து விடவில்லை. மாறாக, அதன் பிறகு தனது பனூ ஆமிர் கோத்திரத்தைத் தூண்டி விட்டான். முஸ்லிம்களின் எஞ்சிய கோத்திரத்தின் மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்று அவன் தூண்டினான். அவர்களில் சிலர் மறுத்தனர்.

ஆனால் அவர்கள் மறுத்து விட்டனர். மேலும் அபூ பர்ரா பொறுப் பேற்றிருக்கும் நிலையில் நாங்கள் முஸ்லிம்களை தாக்க மாட்டோம் என்று கூறினர். அப்போது ஆமிர், பனூ சுலைம் கோத்திரத்திலிருந்து பனூ ரிக்ல், ஸக்வான், உஸைய்யா ஆகியோரை தன்னுடன் அழைத்துக் கொண்டான். (இவர்கள் புகாரி ஹதீஸின் அடிப்படையில் எங்களுக்கு தப்லீக் செய்வதற்காக சிலலை எங்களிடம் அனுப்பி வையுங்கள் என குழுவாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்து வேண்டினர்.

மேலும் முஸ்லிம்களைத் தங்களுடன் அழைத்துச் சென்றனர். பின்னர் அவர்கள் தான் முஸ்லிம்களின் இந்த சிறிய மற்றும் நிராயுதபாணியாக இருந்த ஜமாஅத்தின் மீது தாக்குதல் நடத்தினர். முஸ்லிம்கள் இந்த காட்டுமிராண்டிகளைத் தங்களை நோக்கி வருவதைக் கண்ட போது அவர்களிடம் கூறினர். நாங்கள் உங்களுடன் பகைமை காட்டவோ, சண்டையிடவோ வரவில்லை.

நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சார்பாக ஒரு பணியை செய்ய வந்துள்ளோம். நாங்கள் உங்களுடன்

சண்டையிடுவதற்கு எங்களுக்கு எந்த எண்ணமும் இல்லை. ஆயினும் அவர்கள் எதனையும் கேட்கவில்லை. அனைவரையும் வாளால் கொன்று குவித்தனர். அங்கிருந்த சஹாபாக்களில் ஒருவர் மட்டுமே தப்பினார். அவர் கால் ஊனமுற்றவராவார். அவர் மலை மீது ஏறி இருந்தார். அந்த சஹாபியின் பெயர் கஅப் பின் ஸைது ஆகும். அவரைப் பற்றி ஏற்கனவே நான் கூறியுள்ளேன்.

இன்னும் வேறு சில அறிவிப்புகளிலிருந்து தெரிய வருகின்றது. நிராகரிப்பாளர்கள் அவர் மீது தாக்குதல் நடத்தினர். அவர்கள் மிகவும் காயமுற்றார். நிராகரிப்பாளர்கள் அவரை இறந்து விட்டதாகச் கருதிச் சென்று விட்டனர். ஆனால் அவரது உடலில் உயிர் எஞ்சியிருந்தது. இவ்வாறு பின்னர் தப்பித்து விட்டார்.

சஹாபாக்களின் இந்த ஜமாஅத்தில் இருவர் அதாவது அம்ர் பின் உமய்யா ஸம்ரீ, முன்ஸிர் பின் முஹம்மது ஆகிய இருவரும் தங்களது ஒட்டங்களை மேய்ப்பதற்காக தமது குழுவை விட்டுப் பிரிந்து இங்கும் அங்கும் சென்றிருந்தார்கள். அவர்கள் தொலைவிலிருந்து தங்களது கூடாரத்தின் பக்கம் பார்த்தார்கள். அப்போது பறவைகள் கூட்டம் கூட்டமாக வட்டமடித்துக் கொண்டிருந்தன.

இந்த பாலைவன நிகழ்வை அவர்கள் நன்று புரிந்து கொண்டிருந்தார்கள். மணலின் மேலே பறவைகள் இவ்வாறு வட்டமடித்துக் கொண்டிருந்தால் அதன் பொருள் அவற்றிற்குக் கீழ் உணவுக்கான ஏதோவதோர் ஏற்பாடு உள்ளது என்பதாகும்.

எனவே ஏதோ சண்டை நடந்துள்ளது என்பதை அவர்கள் உடனே புரிந்து கொண்டார்கள். திரும்பி வந்து பார்த்தார்கள். அநீதியாளர்களான நிராகரிப்பாளர்கள் செய்த அக்கிரமங்களும் அநியாயங்களும் அவர்களின் கண்களுக்கு முன்னால் இருந்தன. தொலைவில் இருந்து பார்த்த போது அவர்கள் உடனே தங்களுக்குள் இப்போதும் நாம் என்ன செய்ய வேண்டும்? என்று ஆலோசனை செய்தனர்.

அவர்களில் ஒருவர், நாம் உடனே இங்கிருந்து வெளியேறி விடலாம் என்றும் மதீனாவிற்கு சென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் தகவல் கொடுக்க வேண்டும் என்றும் கூறினார். ஆனால் இரண்டாம் நபர் அந்த ஆலோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் கூறினார்.

எங்கு நமது அமீர் முன்ஸிர் பின் அம்ரு அவர்கள் ஷஹீதானார்களோ அந்த இடத்திலிருந்து நான் ஒருபோதும் ஓட மாட்டேன். நாம் இங்கேயே சண்டையிடுவோம் என்று கூறினார். இவ்வாறு அவர்களும் முன்னேறினர். சண்டையிட்டு ஷஹீதாயினர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களால் எழுதப்பட்ட சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல், பக்கம் 518–519)

அதாவது ஹஸ்ரத் முன்ஸிர் பின் முஹம்மது ஒட்டகத்தை மேய்ப்பதற்காக வெளியே சென்றிருந்தார்கள். அவர் திரும்பி வந்ததும் அவரும் எதிரிகளுக்கு எதிராகப் போரிட்டார். அங்கேயே ஷஹீதானார். இவ்வாறே அவரது ஷஹாதத் ஹிஜ்ரி நான்காம் ஆண்டு நிகழ்ந்தது.

இரண்டாவது சஹாபி ஹஸ்ரத் ஹாதிப் பின் அபீ பல்தஆ ஆவார். அவர் பனூ அஸது கோத்திரத்தைச் சார்ந்தவராவார். அவரது சுட்டுப்பெயர் அபூ அப்தில்லாஹ்வாக இருந்தது. மேலும் அன்னாரின் சுட்டுப் பெயர் அபூ முஹம்மது ஆக இருந்தது என்றும் கூறப்படுகிறது. ஹஸ்ரத் ஹாதிப் பின் அபீ பல்தஆ யமன் நாட்டைச் சார்ந்தவராக இருந்தார்.

ஆஸிம் பின் அம்ர் அறிவிக்கின்றார். ஹஸ்ரத் ஹாதிப் பின் அபீ பல்தஆ மற்றும் அன்னாரின் அடிமை ஸஅதும் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தனர். அப்போது இருவரும் ஹஸ்ரத் முன்ஸிர் பின் முஹம்மது பின் உக்பாவிடத்தில் தங்கினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹாதிப் பின் அபீ பல்தஆ மற்றும் ஹஸ்ரத் ரஹீலா பின் காலித் ஆகிய இருவருக்கும் இடையில் சகோதரத்துவத்தை நிலைநாட்டினார்கள்.

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உவைம் பின் சாயிதா மற்றும் ஹஸ்ரத் ஹாத்திப் பின் பல்தஆ இருவருக்கும் இடையில் சகோதரத்துவ பந்தத்தை நிலைநாட்டினார்கள். ஹஸ்ரத் ஹாதிப் பின் அபீ பல்தஆ பத்ர், உஹது மற்றும் அகழ் போர் உட்பட நபி (ஸல்) அவர்களுடன் அனைத்துப் போர்களில் பங்கு பெற்றார்கள்.

நபி (ஸல்) அவர்கள் அன்னாரிடத்தில் தப்லீக் கடிதம் ஒன்றை கொடுத்து மகூகஸ் அரசர் அலெக்ஸாண்டரிய்யாவுக்கு அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் ஹாதிப் பின் அபீ பல்தஆ நபி (ஸல்) அவர்களுடைய அம்பை எய்தும் வீரர்களில் ஒருவராக இருந்தார்கள்.

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு கூறப்படுகின்றது. அதாவது ஹஸ்ரத் ஹாதிப் பின் அபீ பல்தஆ அறிவீனமான காலகட்டத்தில் குரைஷிகளின் மிகச் சிறந்த குதிரை சவாரி வீரராகவும், கவிஞராகவும் திகழ்ந்தார்கள்.

சிலர் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஹாதிப் பின் அபீ பல்தஆ உபைதுல்லாஹ் பின் ஹுமீது என்பவரின் அடிமையாக இருந்தார்கள். அன்னார் தனது எஜமானருக்கு இழப்பீடு கொடுத்துச் சுதந்திரம் பெற்றார். இழப்பீட்டுத் தொகையை அன்னார் மக்கா வெற்றியின் நாளன்று செலுத்தினார்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 491, ஹாத்திப் பின் அபீ பல்தஆ (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 61, ஹாத்திப் பின் அபீ பல்தஆ (ரலி) – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸுல் அரபீயில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 4–5, ஹாத்திப் பின் அபீ பல்தஆ (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உம்மே சலமா அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நபி (ஸல்) அவர்கள் எனது கணவரின் மரணத்திற்குப் பிறகு எனக்குத் திருமணத்திற்கான செய்தியை அன்னார் மூலமாகவே அதாவது ஹஸ்ரத் ஹாதிப் பின் அபீ பல்தஆ மூலமாக அனுப்பி வைத்தார்கள்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஜனாயிஸ், பாபு மா யகூலு இன்தல் முஸீபா தொகுதி 4 பக்கம் 50 ஹதீஸ் எண் 1516 – மொழிபெயர்ப்பு நூர் ஃபுண்டேஷன்)

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் ஹஸ்ரத் ஹாதிப் பின் அபீ பல்தஆ அவர்களிடமிருந்து கேட்டார்கள். அவர்கள் கூறி வந்தார்கள். அதாவது நபி (ஸல்) அவர்கள் உஹது போர் நாளன்று என் பக்கம் கவனம் செலுத்தினார்கள். அன்னார் மிகவும் துன்பத்தில் இருந்தார்கள். போருக்குப் பிறகு சற்று சூழல் சீரானது. ஹஸ்ரத் அலி அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் துன்பத்தில் இருந்ததைப் பார்த்தார்கள்.

ஹஸ்ரத் அலி அவர்களின் கைகளில் தண்ணீருக்கான குவளை இருந்தது. நபி (ஸல்) அவர்கள் அந்த பாத்திரத்திலிருந்து தண்ணீரை எடுத்து தமது முகத்தைக் கழுவினார்கள். ஹாத்திப் அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் இவ்வாறு உங்களை யார் செய்தது? என்று கேட்டார்.

நபி (ஸல்) அவர்கள் உத்பா பின் அபீ வக்காஸ் தான் எனது முகத்தில் கல்லெறிந்தான் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஹாத்திப் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கொலை செய்யப்பட்டு விட்டார்கள் என்ற குரலை மலை மீது கேட்டேன். இந்தக் குரலைக் கேட்டு நான் இந்த நிலைக்கு வந்துள்ளேன்.

அதாவது எனது ரூஹ் என்னை விட்டுப் பிரிவது போன்றும், எனது உயிர் என்னை விட்டுப் பிரிந்து கொண்டிருப்பது போன்றும் நான் உணர்கின்றேன். உடலில் உயிரில்லை.

ஹஸ்ரத் ஹாத்திப் அவர்கள் மீண்டும் நபி (ஸல்) அவர்களிடத்தில் உத்பா எங்கே? என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் அதோ அந்த பக்கம் என்று சைகை செய்து காட்டினார்கள். ஹஸ்ரத் ஹாத்திப் அவர்கள் அவனிடத்தில் சென்றார்கள். அவன் மறைந்திருந்தான். எந்த அளவுக்கு என்றால் இறுதியில் ஹாத்திப் அவர்கள் அவனைக் கையகப்படுத்தி அடக்குவதில் வெற்றி பெற்றார்கள். ஹஸ்ரத் ஹாத்திப் அவர்கள் வாளின் துணை கொண்டு அவரது தலையைத் துண்டித்தார்கள்.

அவனிடமிருந்த பொருட்களையெல்லாம் குதிரையைப் பிடித்து நபி (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அதனை ஹாத்திபிடம் ஒப்படைத்தார்கள். ஹஸ்ரத் ஹாத்திப் அந்த பக்கம் சென்றார்கள். அவனோ ஒழிந்திருந்தான். இறுதியில் பிடிப்பதில் வெற்றியடைந்தார்கள். ஹஸ்ரத் ஹாத்திப் அவர்கள் வாளினால் அவனைத் தாக்கி தலையைத் துண்டாக்கினார்கள்.

பின்னர் அவனது அனைத்துப் பொருட்களையும் குதிரையையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த அனைத்துப் பொருட்களையும் ஹஸ்ரத் ஹாத்திப் அவர்களுக்குக் கொடுத்து விட்டார்கள். மேலும் ஹாத்திபிற்காக துஆ செய்தார்கள். அன்னார் அல்லாஹ் உம் மீது திருப்தி கொள்வானாக. அல்லாஹ் உம்மீது திருப்தி கொள்வானாக என்று இரண்டு முறை துஆ செய்தார்கள்.

(கிதாப் சுனனுல் குப்ரா லில் பைஹக்கீ.... ஹதீஸ் எண் 13041, 6 வது ஜுஸூ, பக்கம் 504 – 2004 ல் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஹாத்திப் பின் அபீ பல்தஆ அவர்கள் ஹிஜ்ரி 30 ஆம் ஆண்டு மதீனாவில் தமது 65 வது வயதில் வஃபாத்தானார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அன்னாரின் ஜனாஸாவை தொழ வைத்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 61 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸுல் அரபீயில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மகூகஸ் அரசருக்கு அனுப்பிய கடிதத்தின் விளக்கமாக வருகின்றது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள், இது அரசர்களுக்கு அனுப்பப்பட்ட 'மூன்றாவது கடிதம்' என்று எழுதுகின்றார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களால் எழுதப்பட்ட சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல், பக்கம் 818)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 'நான்காவது கடிதம்' என்று குறிப்பிடுகின்றார்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 321)

எனினும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை தலைவர்களுக்கும் அரசர்களுக்கும் எட்ட வைப்பதற்கு எழுதப்பட்ட கடிதங்களில் ஒரு கடிதம் எகிப்து அரசர் மகூகஸ் பெயரிலும் எழுதப்பட்டது. அவர் கைஸர் பேரரசாங்கத்தின் கீழ் எகிப்து மற்றும் அலெக்ஸாண்டரிய்யாவின் ஆளுநராக இருந்தார். அதாவது கைஸரைப் போன்று கிறித்தவ மார்க்கத்தைப் பின்பற்றக் கூடியவராக இருந்தார். அவரது பெயர் ஜுரைஸ் பின் மீனா ஆக இருந்தது. அவரும் அவரது குடிமக்களும் குபுதி சமுதாயத்தைச் சார்ந்தவராக இருந்தனர். இந்த கடிதம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது சஹாபியான ஹஸ்ரத் ஹாத்திப் அவர்கள் மூலமாக அனுப்பி வைத்தார்கள். அந்த கடிதத்தின் சொற்கள் இவ்வாறாகும்.

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۔ مِنۡ مُحَمَّدٍ عَبۡدِ اللّٰہِ وَرَسُوۡلِہٖ اِلَی الۡمُقَوۡقَسِ عَظِیۡمِ الۡقِبۡطِ ۔ سَلَامٌ عَلٰی مَنِ اتَّبَعَ الۡھُدٰی ۔ اَمَّا بَعۡدُ فَاِنِّیۡ اَدۡعُوۡكَ بِدِعَایَةِ الۡاِسۡلَامِ اَسۡلِمۡ تُسۡلَمۡ یُؤۡتِكَ اللّٰہُ اَجۡرَكَ مَرَّتَیۡنِ ۔ فَاِنۡ تَوَلَّیۡتَ فَعَلَیۡكَ اِثۡمُ الۡقِبۡطِ ۔ یَا اَھۡلَ الۡکِتَابِ تَعَالَوۡا اِلٰی کَلِمَةٍ سَوَاءٍ بَیۡنَنَا وَبَیۡنَکُمۡ اَنۡ لَّا نَعۡبُدَ اِلَّا اللّٰہَ وَلَا نُشۡرِكَ بِہٖ شَیۡئًا وَّلَا یَتَّخِذَ بَعۡضُنَا بَعۡضًا اَرۡبَابًا مِّنۡ دُوۡنِ اللّٰہِ فَاِنۡ تَوَلَّوۡا فَقُوۡلُوا اشۡھَدُوۡا بِاَنَّا مُسۡلِمُوۡنَ ۔

அதாவது அளவற்ற அருளாளனும் அமல்களுக்கு சிறந்த கூலி வழங்கக்கூடியவனாகிய அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பம் செய்கின்றேன். இந்த கடிதம் அல்லாஹ்வின் அடியானனும் அவனது தூதருமாகிய முஹம்மது புறமிருந்து குபுதிகளின் தலைவர் மகூகஸ் அவர்களுக்கு எழுதப்படுகின்றது.

நேர்வழியை ஒப்புக் கொள்கின்றவர் மீது சாந்தி உண்டாவதாக. இதன் பிறகு எகிப்திய ஆளுநரே நான் உங்களை இஸ்லாத்தின் நேர்வழியின் பக்கம் அழைக்கின்றேன். முஸ்லிமாக மாறி இறைவனின் சாந்தியை ஒப்புக் கொள்ளுங்கள். இரட்சிப்பிற்கென்று தற்போது ஒரேயொரு வழி தான் உள்ளது. அல்லாஹ் உங்களுக்கு இரண்டு நற்கூலிகளை வழங்குவான். ஒருவேளை நீங்கள் மறுத்து விட்டால் உங்களுடைய பாவங்கள் மட்டுமல்ல. குபுதிகளின் பாவங்களுக்கான பொறுப்பும் உம் மீதே விழும்.

வேதம் வழங்கப்பட்ட மக்களே! உங்களுக்கும் எமக்கும் இடையிலான ஒன்றுபட்ட அந்த கருத்தின் பக்கம் வாருங்கள். அதாவது நாம் அல்லாஹ்வைத் தவிர வேறு எதனையும் வணங்க மாட்டோம். அவனுக்கு எந்நிலையிலும் யாரையும் இணையாக்க மாட்டோம். இறைவனை விட்டு விட்டு எம்மிலிருந்து எவரையும் உதவி செய்பவராக ஆக்கிக் கொள்ள மாட்டோம் என்ற கருத்தின் பக்கம் வாருங்கள். அவர்கள் இதன் பின்னரும் நிராகரித்து விட்டால் நீர் அவரிடத்தில் கூறும். நீங்கள் சாட்சியாக இருங்கள். நாங்களோ ஏக இறைவனுக்குக் கட்டுப்பட்டு நடக்கக்கூடிய அடியார்களாவோம்.

இந்த கடிதமே அரசருக்கு நபி (ஸல்) அவர்கள் அனுப்பிய கடிதமாகும். ஹஸ்ரத் ஹாத்திப் அவர்கள் இஸ்கன்தரியா சென்றடைந்த போது மகூகஸ் அரசரின் ஹாஜிப் அதாவது அரசவை பொறுப்பாளரைச் சந்தித்து அரசரிடம் சென்றார்கள். நபி (ஸல்) அவர்களின் கடிதத்தை கொடுத்தார்கள். மகூகஸ் கடிதத்தைப் படித்தார். பின்னர் ஹஸ்ரத் ஹாத்திப் அபீ பல்ததாவை நோக்கி ஏளனமான முறையில் கூறினார்.

உங்களுடைய இந்த நபர் அதாவது நபி (ஸல்) அவர்கள் உண்மையிலேயே இறைத்தூதர் என்றால் இந்த கடிதத்தை அனுப்புவதற்குப் பகரமாக எனக்கு எதிராக இறைவா! என்னை அந்த பகுதிக்கு ஆட்சியாளராக்குவாயாக. அதாவது நபி (ஸல்) அவர்களை அந்த பகுதிக்கு ஆட்சியாளராக ஆக்கி விடு என இறைவனிடத்தில் ஏன் துஆ செய்யவில்லை?

ஹஸ்ரத் ஹாத்திப் அவர்கள் அதற்குப் பதிலாக இந்த ஆட்சேபனை சரியானது என்றால் அதே ஆட்சேபனை ஹஸ்ரத் ஈஸா அவர்களின் மீதும் செய்யப்படும். ஏனென்றால் அவரும் தனது எதிரிகளுக்காக இது போன்ற துஆ ஏன் செய்யவில்லை?

பின்னர் ஹஸ்ரத் ஹாத்திப் அவர்கள் மகூகஸ் அவர்களுக்கு அறிவுரையாக கூறினார்கள். நீங்கள் நிதானமாக ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். ஏனென்றால் இதற்கு முன்னர் உங்களுடைய இதே நாட்டில் ஒரு நபர் அதாவது ஃபிர்அவ்ன் வாழ்ந்து சென்றுள்ளான். அவனே முழு உலகிலும் ரப்பாகவும் உயர்ந்த ஆட்சியாளராகவும் இருப்பதாக வாதித்தான். அதனால் இறைவன் அவனை பிடித்தான். எந்த அளவுக்கு என்றால் அவன் முன்னவர்களுக்கும் பின்னவர்களுக்கும் படிப்பினையாகி விட்டான்.

எனவே நான் உங்களிடத்தில் மிகப் பற்றுடன் கூறிக் கொள்கின்றேன். நீங்கள் மற்றவர்களின் வாழ்க்கையிலிருந்து படிப்பினை பெறுங்கள். மற்றவர்கள் உங்களது வாழ்க்கையிலிருந்து படிப்பினை பெறக்கூடிய வகையில் ஆகிவிடாதீர்கள். ஆளுநர் அந்த சஹாபி மிக தைரியத்துடன் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்போது அவர் கூறினார். எங்களுக்கு ஏற்கனவே ஒரு மார்க்கம் கிடைத்துள்ளது. அதை விடச் சிறந்த மார்க்கம் கிடைக்காதவரை எங்களால் அதனைக் கைவிட முடியாது. அதாவது கிறித்தவத்தைக் கைவிட முடியாது என்று அவர் கூறினார். அதற்கு ஹஸ்ரத் ஹாத்திப்

அவர்கள் கூறினார்கள்; இஸ்லாம் எப்படிப்பட்ட மார்க்கம் என்றால் மற்ற அனைத்து மார்க்கங்களை விடவும் தனித்தன்மை கொண்டதாக உள்ளது. இறுதி மார்க்கமாகும்.

ஆனால் அவன் நிச்சயமாக இந்த விஷயத்தை தடை செய்யவில்லை. அதாவது நீங்கள் மஸீஹ் நாஸிரியின் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள். மற்ற அனைத்து உண்மையான நபிமார்கள் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள் என்று இஸ்லாம் போதிக்கின்றது. எவ்வாறு ஹஸ்ரத் மூஸா அவர்கள் ஹஸ்ரத் ஈஸாவைப் பற்றி நற்செய்தி வழங்கி இருந்தார்களோ அதே போன்று ஹஸ்ரத் ஈஸா அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி நற்செய்தி வழங்கியுள்ளார்கள்.

அப்போது மகூகஸ் சற்று சிந்திக்கத் தொடங்கி பின்னர் மௌனமாகி விட்டார். ஆயினும் அதன் பிறகு பெரும் பெரும் கிறித்தவ பாதிரிகள் இருந்த வேறொரு சபையில் மகூகஸ் அரசர் ஹஸ்ரத் ஹாத்திப் அவர்களிடம் மீண்டும் கூறினார். நான் கேள்விப்படுகின்றேன். உங்களது நபி தனது சொந்த ஊரை விட்டே வெளியேற்றப்பட்டு விட்டார். அவர் அந்த சந்தர்ப்பத்தில் தன்னை வெளியேற்றியவர்களுக்கு எதிராக ஏன் துஆ செய்யவில்லை?

எந்த மக்கள் உமது தூதரை ஊரை விட்டு வெளியேற்றினார்களோ அவர்கள் அழிந்து போயிருந்தால் நபி பாதுகாப்பில் இருந்திருப்பார்.

ஹஸ்ரத் ஹாத்திப் அவர்கள் இவ்விஷயத்தை கேட்டார்கள். பின்னர் அதற்கு இவ்வாறு பதில் கூறினார்கள். எங்களது நபி தமது நாட்டை விட்டு வெளியேறும்படி நிர்பந்தம் செய்யப்பட்டார். ஆனால் உங்களது மஸீஹை யூதர்கள் பிடித்து சிலுவையில் அறைந்து அவரைக் கொலை செய்ய விரும்பினர். ஆயினும் அவர் அவர்களுக்கு எதிராக துஆ செய்து அதனால் அவர்களது எதிரிகள் அழிந்து விடவும் இல்லை என்று கூறினார்கள்.

இதைக்கேட்ட மகூகஸ் தாக்கத்திற்கு உள்ளானார். மகூகஸ் பதிலை கேட்டவுடன் இவ்வாறு கூறினார். நிச்சயமாக நீர் ஓர் அறிவு படைத்த மனிதராவீர். மேலும் ஒரு புத்திசாலி மனிதரின் சார்பாக தூதுவராக இங்கு வந்துள்ளீர். நான் உங்களது நபியின் விவகாரங்களை ஆய்வு செய்தேன். நான் நம்புவது என்னவென்றால், நிச்சயமாக அவர் எந்த தீய விஷயத்தையும் போதிக்கவில்லை. அதே போன்று எந்த நல்ல விஷயத்திலிருந்தும் தடுக்கவும் இல்லை.

பின்னர் நபி (ஸல்) அவர்களின் கடிதத்தை யானை தந்தங்கள் வைக்கப்பட்ட பெட்டியில் வைத்து அதில் தனது முத்திரையைப் பதித்தார். அதனைப் பாதுகாப்புடன் தனது வீட்டிற்கு எடுத்துச் சென்றார். ஒரு நம்பிக்கைக்குரிய பெண்ணிடம் அதனை ஒப்படைத்தார். எவ்வாறிருப்பினும் இந்த கடிதத்தின் மீது அவர் கண்ணியத்துடன் நடந்து கொண்டார். அதன் பிறகு மகூகஸ் அரபி தெரிந்த தனது ஓர் எழுத்தாளரை அழைத்தார். நபி (ஸல்) அவர்களது பெயரில் கடிதம் எழுதினார். அதனை ஹஸ்ரத் ஹாத்திப் அவர்களிடம் கொடுத்தார். அக்கடிதத்தில் வாக்கியங்களின் மொழியாக்கம் இவ்வாறாகும்:

அளவற்ற அருளாளன் மற்றும் மேன்மேலும் கருணை காட்டக்கூடிய அல்லாஹ்வின் பெயரால் இக்கடிதத்தை அப்துல்லாஹ்வின் மகனாகிய முஹம்மது (ஸல்) அவர்களுக்கு குபுதிகளின் தலைவர் மகூகஸ் எழுதும் கடிதமாகும். உங்கள் மீது சாந்தி உண்டாவதாக! உங்களது கடிதத்தையும் உங்களது நோக்கத்தையும் நான் புரிந்து கொண்டேன். உங்களது வாதத்தை நான் சீர்தூக்கிப் பார்த்தேன். ஒரு நபி தோன்றுவது அவசியம் என்பதை நான் அறிந்திருந்தேன். ஆயினும் அவர் சிரியாவில் தோன்றுவார்.

அரபு நாட்டில் தோன்ற மாட்டார் என்றே எண்ணினேன். உங்களது தூதுவருடன் நான் கண்ணியத்துடன் நடந்துள்ளேன். அவருடன் இரண்டு பெண்களை அனுப்பி வைக்கின்றேன். உங்களின் பயணத்திற்காகக் குதிரை ஒன்றையும் அனுப்புகின்றேன். வஸ்ஸலாம்.

அதன் பிறகு அவரது கையொப்பம். இந்த கடிதத்திலிருந்து தெளிவாவது என்னவென்றால், எகிப்திய ஆளுனராகிய மகூகஸ் நபி (ஸல்) அவர்களது தூதரடன் கண்ணியத்துடன் நடந்து கொண்டார். மேலும் நபி (ஸல்) அவர்களது வாதத்தின் மீது ஓர் அளவிற்கு ஆர்வமும் காட்டினார். ஆயினும் இஸ்லாத்தை அவர் ஒப்புக் கொள்ளவில்லை. கிறித்தவ மார்க்கத்திலேயே அவர் மரணமடைந்தார் என்பதும் மற்ற அறிவிப்புகளிலிருந்து தெரிய வருகின்றது.

அவருக்கு மார்க்க விவகாரங்களில் ஆர்வம் இருந்து வந்தது. ஆயினும் அவ்விவகாரங்களுக்குத் தேவையான முக்கியத்துவத்தை அவர் வழங்கவில்லை என்பதும் அவரது உரையாடல்களிலிருந்து தெரிய வருகின்றது. எனவே வெளிப்படையில் அவர் மரியாதையான நடைமுறையைக் கைக்கொண்டிருந்தாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாதத்தை அவர் மறுத்து விட்டார்.

மகூகஸ் இரண்டு பெண்களை அனுப்பி வைத்தார். அவர்களில் ஒருவரின் பெயர் மாரியா ஆகும். மற்றொருவரின் பெயரி சீரீன் ஆகும். இவர்கள் இருவரும் சகோதரிகள் ஆவர். மகூகஸ் தமது கடிதத்தில் எழுதியது போன்று அவர்கள் குபுதி சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர்.

அதே சமுதாயத்தைச் சார்ந்தவராகவே மகூகஸும் இருந்தார். அந்த பெண்கள் சாதாரண பெண்களைப் போன்றவர்களாக இருக்கவில்லை. மாறாக, மகூகஸின் எழுத்துக்களில் உள்ளதைப் போன்று அவர்களுக்கு குபுதி சமுதாயத்தில் உயர்தரமான அந்தஸ்து இருந்தது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

உண்மையில் நமக்கு தெரிய வருவது என்னவென்றால், எகிப்தியர்களிடம் இந்த நடைமுறை இருந்து வந்தது. அதாவது அவர்கள் எந்த கண்ணியத்திற்குரிய விருந்தினர்களுடன் தங்களது தொடர்பை அதிகரிக்க விரும்புகின்றார்களோ அவர்களுடனான திருமண பந்தத்திற்காக தங்களது குடும்பம் அல்லது சமுதாயத்தைச் சார்ந்த கண்ணியமிக்கப் பெண்களை திருமணம் முடிக்க அனுப்பி வைப்பார்கள்.

அன்னார் எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் எகிப்திற்குச் சென்றிருந்த போதும் எகிப்திய அரசர் அன்னாருக்கும் கண்ணியமிக்க பெண்ணான ஹஸ்ரத் ஹாஜிரா அவர்களைத் திருமணம் முடித்துக் கொள்ள கூறினார்கள். அன்னார் பின் நாட்களில் ஹஸ்ரத் இஸ்மாயீல் அவர்களுக்கும், அரபு கோத்திரங்களுக்கும் தாயானார்கள்.

எவ்வாறிருப்பினும் மகூகஸ் அனுப்பி வைத்த பெண்கள் மதீனாவை வந்தடைந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மாரியா குபுதியா அவர்களை மணமுடித்தார்கள். அவரது சகோதரியான சீரீன் என்ற பெண்ணை அரபு நாட்டின் மிகவும் பிரபலமான கவிஞராகிய ஹஸ்ஸான் பின் சாபித் அவர்களுக்கு மணமுடித்து வைத்தார்கள்.

இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகனும் நபித்துவ காலகட்டத்தில் பிறந்த ஒரே சந்ததியுமாகிய ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களை ஈன்றெடுத்த அருளுக்குரிய பெண்மணி தான் இந்த மாரியா ஆவார்கள்.

இங்கு குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், இரண்டு பெண்களும் மதீனாவிற்கு வந்தடைவதற்கு முன்னதாகவே ஹாத்திப் பின் அபீ பல்ததா அவர்களின் தப்லீக்கின் மூலமாக முஸ்லிமாகி இருந்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட கோவேறுக் கழுதை வெள்ளை நிறம் கொண்டதாக இருந்தது. அதில் நபி (ஸல்) அவர்கள் பெரும்பாலும் சவாரி செய்து வந்தார்கள். உஹது போரிலும் இதே கோவேறுக் கழுதையில் தான் சவாரி செய்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களால் எழுதப்பட்ட சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல், பக்கம் 818–821)

மகூகஸிற்கு எழுதப்பட்ட கடிதம் தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மேலும் விவரிக்கின்றார்கள்: இது ரோமானிய பேரரசருக்கு எழுதப்பட்ட அதே கடிதத்தின் வார்த்தைகளாக இருந்தது. வித்தியாசம் என்னவென்றால் நீங்கள் இந்த தூதுச் செய்தியை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் ரோமானிய மக்களின் பாவங்களின் சுமைகளும் உம் மீதே சுமத்தப்படும் என அதில் எழுதப்பட்டிருந்தது. ஆனால் இதில் குபுதிகளின் பாவங்களின் சுமை உம் மீது சுமத்தப்படும் என எழுதப்பட்டிருந்தது.

ஹாத்திப் அவர்கள் எகிப்தை அடைந்த போது மகூகஸ் அரசர் தமது தலைநகரத்தில் இல்லை. மாறாக, இஸ்கன்தரியா என்ற ஊரில் இருந்தார். ஹாத்திப் இஸ்கன்தரியாவிற்குச் சென்றார்கள். அங்கு அரசர் கடற்கரை ஓரத்தில் சபை ஒன்றைக் கூட்டியிருந்தார். ஹாத்திப் அவர்களும் ஒரு படகில் அந்த இடத்தை கடக்க முடியும். அவர் படகில் சவாரி செய்து தீவான அந்த இடத்தை அடைந்தார்.

அரசரைச் சுற்றிலும் பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது. ஹாத்திப் அவர்கள் கடிதத்தை உயர்த்திக் காட்டி அங்கிருந்தே உரத்த குரலில் படிக்கத் தொடங்கினார்கள். அந்த நபரை இங்கே கொண்டு வாருங்கள் என அரசர் கட்டளையிட்டார். பின்னர் நான் அவருக்கு முன் கொண்டு செல்லப்பட்டேன்.

அன்னார் எழுதுகின்றார்கள்:

ஹாத்திப் மகூகஸ் அரசரிடம் இவ்வாறு கூறினார். இறைவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் ஈஸா (அலை), ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தொடர்பாக கூறியுள்ள விஷயங்களைப் போன்று மூஸா (அலை) அவர்கள் கூட ஹஸ்ரத் ஈஸாவைப் பற்றி செய்திகளை வழங்கவில்லை. இவ்வாறு நாம் உம்மை முஹம்மது (ஸல்) அவர்களின் பக்கம் நாம் உங்களை அழைக்கின்றோம்.

எவ்வாறு நீங்கள் யூதர்களை கிறித்தவத்தின் பக்கம் அழைக்கின்றீர்களோ அவ்வாறே நாங்களும் அழைக்கின்றோம். ஒவ்வொரு நபிக்கும் ஒரு உம்மத் உள்ளது. அவர் ஓர் ஜமாஅத்தை உருவாக்குவது அவரது கடமையாகும்.

எனவே நீங்கள் ஒரு நபியின் காலகட்டத்தை அடைந்திருக்கின்றீர்கள். அவரை இறைவன் முழு உலகிற்கும் நபியாக ஆக்கி அனுப்பியுள்ளான். எனவே அவரை ஒப்புக் கொள்வது உங்களது கடமையாகும். எமது மார்க்கம் நீங்கள் மஸீஹை பின்பற்றுவதிலிருந்து உங்களைத் தடுக்கவில்லை. மாறாக, மற்றவர்களுக்கும் மஸீஹின் மீது நம்பிக்கை கொள்ளும்படிக் கட்டளையிட்டுள்ளது.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 322)

இந்த மக்கள் மிக தைரியத்துடனும் ஹிக்மத்தை கையாண்டவாறும் தப்லீக்கிற்குரிய உரிமையை வழங்கியவர்கள் ஆவர். அல்லது அரசருக்கோ அல்லது ஆளுநருக்கு முன்னிலையிலோ ஒருபோதும் அச்சப்பட்டதில்லை.

அடுத்து ஒரு பெண் மக்காவாசிகளை நோக்கி கடிதத்தை எடுத்துக் கொண்டு செல்லும் சம்பவம் உள்ளது. இந்த கடிதத்தை ஹாத்திப் பின் அபீ பல்ததா அவர்களே அனுப்பினார்கள். அவர்கள் இந்த கடிதத்தை மக்கா வாசிகளுக்காக அனுப்பி வைத்தார்கள். அதில் நபி (ஸல்) அவர்களின் வருகை பற்றிய தகவல் இருந்தது. ஹதீஸில் வருகின்றது. நபி (ஸல்) அவர்கள் மக்காவை வெற்றி கொள்வதற்காகத் தமது படையுடன் புறப்பட்டார்கள். அப்போது ஹாத்திப் பின் அபீ பல்ததா என்ற ஒரு சஹாபி ஒரு கடிதத்தைக் கொடுத்து அனுப்பினார்.

இந்த சம்பவத்தின் விளக்கவுரைக்கு முன்பாக இமாம் புகாரி அவர்கள் லா தத்தஹிதூ என்று தொடங்கும் இந்த திருக்குர்ஆனின் வசனத்தைப் பதிவு செய்கின்றார்கள். புகாரியின் விளக்கவுரையில் ஹஸ்ரத் ஸைனுல் ஆபிதீன் சாஹிப் அவர்கள் இந்த குர்ஆன் வசனத்தை எழுதியுள்ளார்கள்.

لَا تَتَّخِذُوْا عَدُوِّيْ وَعَدُوَّكُمْ اَوْلِيَآءَ அதாவது நம்பிக்கை கொண்ட மக்களே! எனது எதிரிகளையும் உங்களது எதிரிகளையும் ஒருபோதும் நண்பராக்கிக் கொள்ளாதீர்கள்.

ஹஸ்ரத் அலி அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நபி (ஸல்) அவர்கள் என்னையும், சுபைரா மற்றும் மிக்தாத் பின் அஸ்வத் அவர்களையும் அனுப்பி வைத்தார்கள். மேலும் நீங்கள் செல்லுங்கள். ரூஸாஹே ஹாஹ் என்ற இடம் ஒன்று உள்ளது. அங்கு சென்றடையுங்கள். அங்கு தன்னைத் திரையால் மறைத்துக் கொண்ட ஒரு பெண் இருப்பார். அவரிடத்தில் கடிதம் ஒன்று இருக்கும். அதனை வாங்கிக் கொண்டு வாருங்கள். நாங்கள் அங்கு சென்றடைந்தோம். எங்களது குதிரைகளை வேகமாக ஓட்டினோம்.

நாங்கள் ரூஸாஹே ஹாஹ் என்ற இடத்தை அடைந்தோம். அப்போது அங்கு திரையால் தம்மை மறைத்துக் கொண்ட பெண் ஒருவர் இருப்பதைக் கண்டோம். அவரிடம் கடிதத்தை வெளியே எடு என்று கூறினோம். அதற்கு அந்த பெண்மணி என்னிடத்தில் எந்த கடிதமும் இல்லை என்று கூறினார். அதற்கு நாங்கள் நீ கடிதத்தை வெளியே எடுத்தே தீர வேண்டும். அவ்வாறு நீ எடுக்கவில்லை என்றால் உனது ஆடைகளை கழற்றிச் சோதனை செய்வோம் என்று கூறினோம்.

அப்போது அந்த பெண்மணி கடிதத்தை வெளியே எடுத்தார். நாங்கள் அந்த கடித்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வந்து பார்த்த போது அது ஹாத்திப் பின் அபீ பல்தஆ அவர்களின் சார்பாக மக்காவிலுள்ள இணை வைப்பவர்களின் பெயரில் அக்கடிதம் எழுதப்பட்டிருந்தது. நபி (ஸல்) அவர்களின் ஒரு திட்டத்தைப் பற்றி அதில் தகவல் கொடுக்கப்பட்டிருந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹாத்திப் பின் அபீ பல்தஆ அவர்களை அழைத்து, ஹாத்திப் இது என்ன? என்று கேட்டார்கள்.

அதற்கு அவர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னைப் பற்றி அவசரப்பட்டு விடாதீர்கள். நான் எப்படிப்பட்ட நபர் என்றால் நான் குரைஷிகளோடு பின் நாட்களில் இணைந்தவனாவேன். நான் குரைஷிகளைச் சார்ந்தவனாக இருக்கவில்லை. நபி (ஸல்) அவர்களுடன் இருந்த முஹாஜிர்களுக்கு மக்காவில் உறவுகள் இருந்தன. அதன் மூலமாக அவர்கள் தங்களது வீட்டையும் செல்வத்தையும் பாதுகாத்துக் கொண்டார்கள்.

நான் மக்காவாசிகளுக்கு ஏதாவதோர் உபகாரம் செய்ய விரும்பினேன். ஏனென்றால் எனக்கு அவர்களுடன் எந்த உறவும் இருந்ததில்லை. நான் இவ்வாறு உபகாரம் செய்தால் அவர்கள் என்னைக் கருத்தில் கொள்வார்கள் என நான் எண்ணினேன். நான் நிரகாரிப்பு மற்றும் மார்க்கத்தைப் புறக்கணித்தன் காரணமாக இந்த செயலை ஒருபோதும் செய்யவில்லை.

நான் நிராகரிப்பாளனும் இல்லை. மார்க்கத்தை விட்டு வெளியேறி இஸ்லாத்தை கைவிட்டு விடவும் இல்லை. நான் நயவஞ்சகனும் அல்ல. நான் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு ஒருபோதும் நிராகரிப்பை விரும்பவில்லை. நான் உங்களுக்கு நம்பிக்கை ஊட்டுகிறேன்.

இதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நீர் உண்மையைக் கூறியுள்ளீர். ஹஸ்ரத் உமர் அவர்கள் அந்த சந்தர்ப்பத்தில் அங்கு இருந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இந்த நயவஞ்சகனின் தலையைத் துண்டித்துக் கொலை செய்ய எனக்கு அனுமதி தாருங்கள் என அன்னார் கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், இவர் பத்ர் போரிலும் பங்கு பெற்றிருந்தார். அல்லாஹ் பத்ர் போரில் பங்கு பெற்றவர்களைப் பார்த்து நீங்கள் விரும்புகின்றவற்றைச் செய்யுங்கள். நான் உங்கள் பாவங்கள் மீது திரையிட்டு விட்டேன் என்று கூறினான்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜிஹாது, பாபுல் ஜாஸூஸ், ஹதீஸ் எண் 3007, ஹஸ்ரத் செய்யது ஜைனுல் ஆபீதீன் வலியுல்லாஹ் ஷா சாஹிப் அவர்களது மொழியாக்கம் மற்றும் மொழிபெயர்ப்பு, தொகுதி 5 பக்கம் 350–352 – நஸாரத் இஷாஅத் ரப்வா)

ஹஸ்ரத் வலியுல்லாஹ் ஷா சாஹிப் எழுதுகின்றார்கள்:

புகாரியின் ஒரு ஹதீஸிற்கு விளக்கவுரையாக எழுதுகின்றார்கள். இன்னோர் அறிவிப்பில் அந்த பெண்மணி இணை வைப்பவள் என்று கூறப்பட்டது. அவளைப் பிடிப்பதற்காக ஹஸ்ரத் அலி அவர்களும் அபூ முர்ஸது கனவி அவர்களும், ஹஸ்ரத் சுபைர் அவர்களும் சென்றார்கள். அந்த பெண்மணி தமது ஒட்டத்தின் மீது அமர்ந்து சவாரி செய்து சென்று கொண்டிருந்தாள்.

கடிதத்தை மறைத்தது தொடர்பாக மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அவள் நாங்கள் கோபத்துடன் இருப்பதை பார்த்ததும் தனது இடுப்பில் கட்டப்பட்டிருந்த துணியிலிருந்து கடிதத்தை வெளியே எடுத்து வைத்தார். நாங்கள் அந்த பெண்மணியை அழைத்துக் கொண்டு நபி (ஸல்) அவர்களிடத்தில் வந்தோம்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

இவர் அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும், நம்பிக்கையாளர்களுக்கும் நம்பிக்கைத் துரோகம் செய்துள்ளார். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இவரின் தலையை வெட்டுவதற்கு எனக்கு அனுமதி தாருங்கள் என்று கூறினார்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள் இவர் அதாவது ஹாத்திப் பின் அபீ பல்தஆ பத்ர் போரில் பங்கு பெற்ற சஹாபி இல்லையா? என்று கேட்டார்கள்.

மேலும் அன்னார் கூறினார்கள்:

அல்லாஹ் பத்ர் போர் சஹாபிகளைப் பார்த்தான். மேலும் கூறினான். நீங்கள் விரும்புபவற்றைச் செய்யுங்கள். உங்களுக்கு சுவர்க்கம் ஆகுமானதாகிவிட்டது. அல்லது உங்களது குறைகள் மீது திரையிடப்படும். உங்களை நான் மன்னித்து விட்டேன் என்று கூறினான். இதைக் கேட்ட ஹஸ்ரத் உமர் அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. மேலும் அல்லாஹ்வும் அவனது தூதருமே நன்கு அறிந்தவர்கள் என்று கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி, பாபு ஃபஸ்ல் மன் ஷஹித பத்ரின், ஹதீஸ் எண் **3983**, ஹஸ்ரத் செய்யது ஜைனுல் ஆபீதீன் வலியுல்லாஹ் ஷா சாஹிப் அவர்களது மொழியாக்கம் மற்றும் மொழிபெயர்ப்பு, தொகுதி **8** பக்கம் **53–55** – நஸாரத் இஷாஅத் ரப்வா)

ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் ஹஸ்ரத் ஹாத்திப் அவர்களை எகிப்திய அரசர் மகூகஸ் அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். ஒப்பந்தம் ஒன்றை வடிவமைத்தார்கள். அது ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்கள் எகிப்தின் மீது தாக்குதல் நடத்தும் வரை இரு தரப்பிற்கிடையிலும் நிலைபெற்றிருந்தது. அது ஒரு அமைதிக்கான ஒப்பந்தம் ஆகும்.

**(அல் இஸ்திஆப் தொகுதி 1 பக்கம் 376, ஹாத்திப் பின் அபீ பல்தஆ – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குத்புல் அச்சிடப்பட்டது)**

ஹஸ்ரத் ஹாத்திபைப் பற்றி வருகின்றது. அவர் அழகிய உடலைக் கொண்டிருந்தார். தாடி வைத்திருந்தார். கழுத்து குனிந்திருந்தது. நெஞ்சு நிமிர்ந்திருந்தது. விரல்கள் தடித்திருந்தன.

யாகூப் பின் உக்பா அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் ஹாத்திப் பின் அபீ பல்தஆ அவர்கள் நான்காயிரம் தினார்களை விட்டு விட்டுச் சென்றார்கள். அன்னார் தானியங்களை விற்கக்கூடிய வியாபாரியாக இருந்தார்கள். அன்னார் மதீனாவில் தமது சொத்துக்களை விட்டுச் சென்றார்கள்.

**(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 61 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸுல் அரபீயில் அச்சிடப்பட்டது)**

ஹஸ்ரத் ஜாபிர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒருமுறை ஹாத்திப் பின் அபீ பல்தஆ அவர்களின் அடிமை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் அன்னாருக்கு எதிராக புகார் ஒன்றை எடுத்துச் சென்றான். தனது எஜமானருக்கு எதிராக புகார் செய்தான். அதாவது ஹாத்திப் அவர்களைப் பற்றி அவரது அடிமை கூறினார். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஹாத்திப் நிச்சயமாக நரகத்தில் நுழைவார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் நீ பொய் பேசுகின்றாய். அவர் ஒருபோதும் அதில் நுழைய மாட்டார். ஏனென்றால் அவர் பத்ர் போரிலும், ஹுதைபிய்யா உடன்படிக்கையிலும் பங்கு பெற்றவர் ஆவார் என கூறினார்கள்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் **3864**)

ஏற்கனவே கூறப்பட்டது போன்று அன்னார் வியாபாரியாக இருந்தார்கள். சந்தையில் பொருட்களை விற்று வந்தார்கள்.

பொருட்களை விற்பது மற்றும் அதற்கான விலை நிர்ணயம் செய்வது தொடர்பான இஸ்லாமிய போதனை என்ன? என்பதை விளக்கியவாறு அன்னாரின் நடைமுறையை அடிப்படையாகக் கொண்டு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஹூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் அரசாங்கம் விலை நிர்ணயம் செய்வதற்கு அதிகாரம் படைத்திருந்தது. சந்தை விலை நிலவரப்படி இஸ்லாமிய அரசாங்கம் விலை நிர்ணயித்து வந்தது.

இந்த வகையில் ஹதீஸில் வருகிறது. ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மதீனாவின் கடை வீதிகளில் வலம் வந்தார்கள். அப்போது அன்னார் பார்த்தார்கள். ஹாத்திப் பின் அபீ பல்தஆ என்ற ஒரு நபர் கடை வீதியில் இரண்டு மூட்டை காய்ந்த திராட்சைகளை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தார். அதனை நீங்கள் உலர்ந்த திராட்சை என்று கூறலாம். அல்லது சில இடங்களில் கிஸ்மிஸ் என்றும் கூறுகின்றனர். ஹஸ்ரத் உமர் அவர்கள் அவர்களிடத்தில் விலையை விசாரித்தார்கள்.

அதற்கு அன்னார் ஒரு திர்ஹமிற்கு இரண்டு மத் அளவு பழம் என்று கூறினார்கள். இந்த விலை என்பது கடை வீதிகளின் பொதுவான விலையை விட மிகவும் குறைவான விலையாக இருந்தது. அதனால் நீங்கள் உங்கள் வீட்டிற்குச் சென்று இதனை விற்பனை செய்யுங்கள் என்று கூறினார்கள்.

ஏனென்றால் சந்தையில் அந்த விலை மிகக் குறைவானதாக இருந்தது. ஆனால் கடை வீதிகளில் அதனைக் கூடுதலான விலைக்கு விற்பனை செய்ய விடமாட்டார்கள்.

ஏனென்றால் அதனால் சந்தை விலை தாக்கத்திற்கு உள்ளாகி விடும். மேலும் மக்களுக்கு கடைக்காரார்கள் மீது தப்பெண்ணம் ஏற்பட்டு விடும். இரண்டாவது, சந்தையின் விலை அதிகமாக இருப்பதால் கடைக்காரர்கள் எங்களிடமிருந்து ஆகுமற்ற விலையை பெறுகின்றார்கள் என்று மக்களும் கூறுவார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஹூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

மார்க்கச் சட்ட வல்லுனர்கள் இது பற்றி நிறைய விவாதித்துள்ளார்கள். உமர் (ரலி) அவர்கள் பிற்காலத்தில் தமது கருத்தைப் பின் வாங்கிக் கொண்டார்கள் என்று கூறுகின்றனர். எப்படி இருப்பினும் பொதுவாக பெரும்பாலான மார்க்கச் சட்ட வல்லுனர்கள் உமர் அவர்களின் கருத்தைச் செயல்படுத்தத்தக்க விதிமுறையாகவே ஒப்புக் கொள்கின்றனர். மேலும் இஸ்லாமிய அரசாங்கத்தின் கடமை என்னவென்றால் அவர்கள் சந்தையில் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். இல்லையென்றால் சமுதாயத்தின் ஒழுக்கமும் நேர்மையும் பாதிப்பிற்குள்ளாகி விடும்.

எனினும் இங்கு ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். இங்கு கூறப்படுகின்ற விஷயம் என்பது பொதுவாக சந்தைக்கு கொண்டு வரப்பட்டு திறந்தவெளி சந்தையில் விற்கப்படுகின்ற பொருட்கள் தொடர்புடையதாகும். எந்த பொருட்கள் சந்தைக்கு கொண்டு வரப்படுவதில்லையோ தனிப்பட்ட ரீதியிலான விற்பனை தொடர்புடையதாக உள்ளதோ அந்த பொருட்களைப் பற்றி இங்கு கூறப்படவில்லை.

எனவே சந்தைக்குக் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற பொருட்கள் தொடர்பாக இஸ்லாத்தின் தெளிவான கட்டளை என்னவென்றால், அதற்கென ஒரு விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அப்போது தான் கடைக்காரர்கள் விலையில் கூடுதல் குறைவை செய்ய முடியாது.

(குத்பாத்தே மஹ்மூது (ரலி) – தொகுதி 19 பக்கம் 307–308, குத்பா ஜுமுஆ 10 ஜுன் 1938)

இஸ்லாமிய அரசாங்க அமைப்பின்கீழ் கால்நடை பராமரிப்பு நிலையம் அமைப்பதும் அங்கு தண்ணீருக்காகக் கிணறு தோண்டுவதற்கான பணிகளை செய்வதும் இஸ்லாமிய அரசாங்கத்தின் பணியாகும்.

இது தொடர்பாக ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ஹாத்திப் அவர்கள் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பணியைச் செய்தார்கள். அறிவிப்பில் வருகிறது. பனூ முஸ்தலிக் அவர்களுக்கெதிரான போரிலிருந்து திரும்பி வருகின்ற போது நபி (ஸல்) அவர்கள் நகீ என்ற இடத்தைக் கடந்தார்கள். அங்கு மிகப் பெரிய பகுதியையும் அதில் புற்களையும் கண்டார்கள்.

அது பரந்த பகுதியாக இருந்தது. எல்லா இடங்களும் பசுமையான பகுதியாகவே இருந்தன. அங்கு ஏராளமான கிணறுகளும் இருந்தன. அங்கு நிலத்தடி நீரும் நல்லதாக இருந்தது. நபி (ஸல்) அவர்கள் அந்த கிணற்று நீர் தொடர்பாக விசாரித்தார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தண்ணீர் நன்றாக உள்ளது என்று கூறப்பட்டது.

ஆனாலும் நாம் அந்த கிணறுகளின் நீரை பாராட்டும் போது அதன் அளவு குறைந்து விடுகின்றது. கிணறு வற்றி விடுகின்றது. அப்போது நபி (ஸல்) அவர்கள் ஹாத்திப் பின் அபீ பல்தஆ அவர்களுக்குக் கிணறு ஒன்றைத் தோண்டுமாறு கட்டளையிட்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள் நகீ என்ற இந்த இடத்தைக் கால்நடை பராமரிப்பு நிலையமாக மாற்றும் படி கட்டளையிட்டார்கள். அதாவது அரசாங்கத்தின் ஏற்பாட்டின் கீழ் இயங்கக்கூடிய கால்நடை பராமரிப்பு நிலையத்தை அமைக்கும்படி கூறினார்கள். ஹஸ்ரத் பிலால் பின் ஹாரிஸ் மஸனி அவர்களை அதற்குப் பொறுப்பாளராக ஆக்கினார்கள்.

ஹஸ்ரத் பிலால் அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இந்த பூமியின் எத்தனை பகுதியை நான் கால்நடை பராமரிப்பு நிலையமாக மாற்ற வேண்டும்? மிகப் பெரிய பகுதியாக உள்ளது. இதில் எந்த அளவிற்கு நான் அரசாங்க ரீதியிலான கால்நடை பராமரிப்பு நிலையத்தை ஏற்படுத்த வேண்டும்? என்று கேட்டார்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலைப்பொழுது விடிந்ததும் ஒரு நபரை நிற்கச் செய்யுங்கள். உரத்த குரலில் அவரை முகம்மல் என்ற பெயர் கொண்ட மலை மீது நிற்கச் செய்யுங்கள். அது சிறிதாக இருந்தது.

பின்னர் எங்கு வரை அந்த நபரின் குரல் சென்றடையுமோ அந்த பகுதி வரை முஸ்லிம் முஜாஹிதுகளின் குதிரைகள் மற்றும் ஒட்டகங்களுக்கான பராமரிப்பு நிலையத்தை உருவாக்குங்கள். இதுவும் ஏற்பாடாக இருந்தது. சப்தம் எங்கு வரை சென்றடைந்ததோ அதன் இறுதிப் பகுதியில் நிற்கச் செய்யுங்கள்.

பல்வேறு திசைகளில் மக்களை நிற்கச் செய்யுங்கள். சப்தம் சென்றடைகின்ற இடம் வரை கால்நடை பராமரிப்பு நிலையத்திற்கான எல்லையை உருவாக்குங்கள். அது முஜாஹிதுகளின் குதிரைகளுக்கும் ஒட்டகங்களுக்குமான பராமரிப்பு நிலையமாக இருக்கும். அதன் மூலம் அவர்களால் ஜிஹாது செய்ய முடியும். இது பைத்துல் மால் மற்றும் அரசாங்க கால்நடை பராமரிப்பு நிலையமாக இருக்கும். அங்கு போரில் பங்கு பெறுகின்ற முஜாஹிதீன்களின் ஒட்டகங்களும் குதிரைகளும் மேய்க்கப்படும்.

ஹஸ்ரத் பிலால் அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! பொது மக்களாகிய முஸ்லிம்களின் கால்நடைகள் தொடர்பாக என்ன நிலைபாடு? என்று கேட்டார்கள். ஏராளமான முஸ்லிம்களின் கால்நடைகள் வெளியில் திறந்த மைதானத்தில் மேய்கின்றன. அவர்கள் தொடர்பாக நீங்கள் என்ன வழிகாட்டல் வழங்குகின்றீர்கள்? என்று கேட்டார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவை இதில் நுழையாது என்று கூறினார்கள். இந்த இடம் என்பது ஜிஹாது செய்யக்கூடிய மக்களின் ஒட்டகங்கள் மற்றும் குதிரைகளுக்காக மட்டுமே தயார் செய்யப்படுகின்றன என்றும் கூறினார்கள்.

ஹஸ்ரத் பிலால் அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! பலவீனமான ஆண் அல்லது பெண் தொடர்பாக உங்களின் எண்ணம் என்ன? என்று கேட்டார்கள். அவர்களிடத்தில் குறைந்த எண்ணிக்கையில் ஆடுகள் இருந்து அதனை மேய்ப்பதற்கு அவர்களுக்கு ஆற்றல் இல்லாமல் இருந்தால் என்ன செய்வது என்றும் கேட்டார்கள்.

(மிகக் குறைந்த எண்ணிக்கையில் மக்கள் ஏழைகளாக உள்ளனர். அவர்கள் குறைந்த எண்ணிக்கையில் ஒரு சில ஆடுகளை வைத்துள்ளனர். பாலைக் கொண்டு செல்வதே அவர்களுக்கு மிகக் கடினமான பணியாக உள்ளது. அல்லது அவர்களால் வேறு எங்கும் விலங்குகளை அனுப்ப முடியாது. அவர்கள் பலவீனமானவர்கள், முதியவர்கள், பெண்கள் ஆகியோர்கள் ஆவர்).

இது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள். நீங்கள் அவர்களை இங்கு அனுமதியுங்கள். அவர்களின் கால்நடைகள் இங்கு மேய்வதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

(சபலுல் ஹுதா வர் ரிஷாது தொகுதி 4 பக்கம் 352–353, கஸ்வா பனூ முஸ்தலிக் போர், 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஏழைகள், தேவையுடையவர்கள், பலவீனமானவர்களுக்கு அவர்களின் கால்நடைகள் அரசாங்க பராமரிப்பின் கீழ் இயங்குகின்ற இடத்தில் மேய்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. சமுதாய சொத்துக்கள் சமுதாய நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். ஆயினும் ஏழைகளுக்கு தனிப்பட்ட தேவை இருக்குமென்றால் அதிலிருந்து அவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

ஹஸ்ரத் ஹாத்திப் பின் அபீ பல்தஆ அவர்களது நல்லொழுக்கங்கள் தொடர்பாக சஹாபாக்களின் வாழ்க்கை, அந்தஸ்து என்ற புத்தகத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அன்னார் நன்றியுணர்வு கொண்டவராக இருந்தார்.

அவர்களின் ஒழுக்கம் எப்படி இருந்தது என்றால் அவர்களிடத்தில் நன்றியுணர்வு மிகைத்திருந்தது. கருணை மறவாதவராகவும், தெளிவாக பேசக்கூடியவராகவும் இருந்தார். இது அன்னாரின் சிறப்புப் பண்புகளாகும். நண்பர்கள் மற்றும் உறவினர்களை மிகவும் கருத்தில் கொண்டிருந்தார்.

மக்கா வெற்றி கொள்ளப்பட்ட சமயத்தில் ஒரு பெண்ணின் கையில் இணை வைப்பவர்களின் பெயரில் கடிதம் ஒன்றை எழுதி அவர் அனுப்பி வைத்தார். இவை பற்றி ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. உண்மையில் உறவினர்களைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்ற காரணத்தினால் தான் அந்த காரியம் அமைந்திருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அந்த நல்ல எண்ணத்தை அவரின் தெளிவான கூற்றைக் கருத்தில் கொண்டு அன்னாரை மன்னித்தார்கள்.

அல்லாஹ் இந்த சஹாபாக்களின் உயர்தரமான பண்புகளை பேணக்கூடியவர்களாக நம்மை ஆக்குவானாக. அவர்களின் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக.

## ஜமாஅத் உறுப்பினர்கள் அதிகம் அதிகமாக இந்த துஆக்களை செய்து வாருங்கள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இங்கிலாந்தில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டின் முதல் நாளில் அதாவது 3 ஆகஸ்ட் 2018 அன்று நிகழ்த்திய மாநாட்டின் துவக்க உரையில் ஜமாஅத் உறுப்பினர்களை அதிகம் அதிகமாக துரூது ஷரீஃப் துஆவையும், கீழ்க்கண்ட துஆக்களையும் ஓதி வரும்படி வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

(1) اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى
اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ۔

பொருள்: இறைவா! நீ இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்களுடைய குடும்பத்தார் மீதும் கருணை காட்டியது போன்று முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும், அவர்களுடைய குடும்பத்தார் மீதும் கருணை காட்டுவாயாக. நிச்சயமாக நீ புகழுக்குரியவனும் மகத்துவமுள்ளவனும் ஆவாய்.

இறைவா! நீ இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் அளவற்ற அருட்களைக் கொடுத்தது போன்று முஹம்மது (ஸல்) அவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்திற்கும் அருள் புரிவாயாக. நிச்சயமாக நீ புகழுக்குரியவனும் மகத்துவமுள்ளவனும் ஆவாய்.

(2) رَبَّنَا لَا تُزِغْ قُلُوْبَنَا بَعْدَ اِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِنْ لَّدُنْكَ رَحْمَةً ۚ اِنَّكَ اَنْتَ الْوَهَّابُ

பொருள்: எங்களை இறைவா! நீ எங்களுக்கு நேர்வழி காட்டியதன் பின்னர் எங்கள் உள்ளங்களைக் கோணலாக்காதிருப்பாயாக. எங்களுக்கு உன்னிடமிருந்து அருளை வழங்குவாயாக. நிச்சயமாக நீயே வாரி வழங்குபவனாவாய். (3:9)

رَبَّنَا اغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَاِسْرَافَنَا فِيْۤ اَمْرِنَا وَثَبِّتْ اَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ

பொருள்: எங்கள் இறைவா! எங்கள் குற்றங்களையும், எங்கள் செயல்களில் எங்களின் வரம்பு மீறுதல்களையும் எங்களுக்கு மன்னித்தருள்வாயாக! எங்கள் காலடிகளை உறுதிப்படுத்துவாயாக. மேலும் நிராகரிக்கும் மக்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக. (3:148)

(4) رَبَّنَا ظَلَمْنَاۤ اَنْفُسَنَا ٚ وَاِنْ لَّمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُوْنَنَّ مِنَ الْخٰسِرِيْنَ

பொருள்: எங்கள் இறைவா! நாங்கள் எங்களுக்கே அநீதி இழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்குக் கருணை காட்டாவிடில் நாங்கள் நஷ்டமடைந்தவர்களைச் சார்ந்தவர்களாகி விடுவோம். (7:24)

(5) رَبَّنَاۤ اٰتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَّفِي الْاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ

பொருள்: எங்கள் இறைவா! எங்களுக்கு இந்த உலகிலும் வெற்றியினை வழங்குவாயாக. மறுமையிலும் வெற்றியினை (வழங்குவாயாக.) எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்தும் காப்பாற்றுவாயாக. (2:202)

(6) اَللّٰهُمَّ اِنَّا نَجْعَلُكَ فِيْ نُحُوْرِهِمْ وَنَعُوْذُ بِكَ مِنْ شُرُوْرِهِمْ

பொருள்: என் இறைவா! நாங்கள் உன்னை அவர்களின் உள்ளத்தில் வைக்கின்றோம். அதாவது உன் மீதான அச்சத்தை அவர்களது உள்ளத்தில் நிறைப்பாயாக. மேலும் அவர்களது விஷமங்களிலிருந்து உன்னிடம் பாதுகாப்பு தேடுகின்றோம்.

(அபூதாவூது, கிதாப் ஃபஸாயிலுல் குர்ஆன்)

(7) رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِيْ وَانْصُرْنِيْ وَارْحَمْنِيْ

பொருள்: எங்கள் இறைவா! அனைத்தும் உனக்குத் தொண்டு செய்பவைகளாகும். என் இறைவா! என்னைப் பாதுகாப்பாயாக. மேலும் எனக்கு உதவி செய்வாயாக. மேலும் என் மீது கருணை காட்டுவாயாக.

(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அருளப்பட்ட இல்ஹாமிய துஆ)

## தேசிய இஜ்திமா 2018 ஆம் ஆண்டிற்கான ஒப்புதல்

**ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் மிகுந்த பரிவுடன் கிளை அமைப்புகளின் தேசிய இஜ்திமாக்களை 12,13,14 அக்டோபர் 2018 (வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள்.**

**கிளை அமைப்புகளைச் சார்ந்த உறுப்பினர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் காதியான் தாருல் அமானின் ஆன்மீகச் சூழலில் நடைபெறவிருக்கின்ற இந்த அருளுக்குரிய தேசிய இஜ்திமாவில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். இந்த இஜ்திமாக்கள் எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா. (பத்ர் வாரப் பதிப்பு)**

# சய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஜெர்மனி சுற்றுப் பயணம் 2017

**23 ஏப்ரல் 2017 ல் ஜெர்மனியின் செயற்குழு கூட்டத்தில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கலந்து கொண்டு, பல்வேறு செயலர்கள் செய்கின்ற பணிகளைப் பற்றி கேட்டு அவர்களுக்கு வழங்கிய வழிகாட்டல்கள்**

**(அறிக்கை: அப்துல் மாஜித் தாஹிர், கூடுதல் வகீலுத் தஃப்ஸீர், இலண்டன்)**

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

**கல்விச் செயலர்:**

கல்வி செயலர் தமது துறை தொடர்பான அறிக்கையை ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் முன்னிலையில் எடுத்து வைத்தவாறு இவ்வாறு கூறினார்கள். ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுடைய வழிகாட்டலுக்கு ஏற்ப வரும் ஆண்டுகளில் 5 வயதிலிருந்து 10 வயது வரையுள்ள மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்பதற்காக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

பிறகு அமீர் சாஹிப் அவர்களும் அந்த திட்டம் தொடர்பாக தனது சில ஆலோசனைகளைக் கூறினார்கள். அதற்கேற்ப அந்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அதனைச் செயல்படுத்த நாங்கள் முயற்சி செய்து வருகின்றோம் என்று கூறினார்.

அதனைக் கேட்டு விட்டு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

பெரும்பாலான மாணவர்கள் என்னைச் சந்திக்கின்றார்கள். அவர்கள் என்னிடம் கூறுவது என்னவென்றால், நாங்கள் பத்தாம் வகுப்பு படித்து முடித்ததோடு எங்களுடைய படிப்பை விட்டு விட்டோம். இப்போது நாங்கள் பணி செய்கின்றோம். டாக்ஸி ஓட்டுகின்றோம். அல்லது தந்தையோடு இணைந்து நாங்கள் பணி புரிகின்றோம் என்று அவர்கள் கூறுகின்றார்கள். ஆனால் பெண் பிள்ளைகளோ படித்துக் கொண்டே இருக்கின்றார்கள்.

இதனால் ஏற்படுகின்ற பிரச்சனை என்னவென்றால், திருமண உறவு சம்பந்தப்பட்ட பேச்சு வருகின்ற போது அந்த ஆணுக்கும், பெண்ணுக்கும் வரன் பொருந்துவதில்லை. ஏனென்றால் பெண் நன்றாகப் படித்திருக்கின்றார். ஆண் படிக்காமல் இருக்கின்றார். இதன் காரணமாக அந்த திருமண உறவு ஒத்துப் போகாத நிலை ஏற்படுகின்றது.

ஏனென்றால் இளைஞர்களுக்கு படிப்பதன் பக்கம் கவனம் குறைவாக இருக்கின்றது. இளம் பெண்கள் நன்றாகப் படித்து வருகின்றார்கள். பெண் பிள்ளைகளும் கூட நன்றாகப் படித்த பிறகு நாம் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற சிந்தனையோடு செயல்பட வேண்டும். மார்க்கத்திற்குத் தான் முதலிடம் கொடுக்க வேண்டும்.

ஆனால் அந்த பெண்கள் அஹ்மதி இளைஞர்களோடு திருமணம் செய்வதற்கு முன்வைக்கின்ற கோரிக்கைகள் மிக அதிகமாக இருக்கின்றன. அந்த கோரிக்கைகள் நிறைவேற்ற முடியாதவையாக இருக்கின்றன. ஆனால் சிறு சிறு குறைகளை ஏற்றுக் கொண்டு திருமணத்திற்குச் சம்மதிக்க வேண்டும். அப்போது தான் திருமணங்கள் நடைபெற முடியும்.

பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

இவ்வகையில் குத்தாமுல் அஹ்மதிய்யா ஒரு திட்டத்தை வகுத்து செயல்பட வேண்டிய தேவையிருக்கின்றது. அவர்கள் இளைஞர்கள் மத்தியில் கல்வியை வளர்ச்சியடையச் செய்வதற்கு, கல்வியின் பக்கம் அவர்களுக்குக் கவனமூட்டுவதற்கான பணிகளைச் சிறப்பாகச் செய்ய வேண்டும். அதன் காரணமாக இந்த திருமண உறவு சந்பந்தமான பிரச்சனைகளும் முடிவிற்கு வந்துவிடும்.

பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

உங்களிடம் எல்லாப் புள்ளி விபரங்களும் இருக்க வேண்டும். அதாவது எத்தனை மாணவர்கள் இருக்கின்றார்கள். அந்த மாணவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பது போன்ற விவரங்கள் இருக்க வேண்டும். உங்களிடம் பல்கலைக்கழகங்களில் படிக்கின்ற மாணவர்கள் பற்றிய விவரங்கள் மட்டுமே இருக்கின்றன.

அந்த மாணவர்களுக்கு மாணவர் சங்கத்தினுடைய உதவியும் கிடைக்கின்றது. ஆனால் கீழ்மட்டத்திலுள்ள மாணவர்களின் விவரங்கள் உங்களிடம் இருப்பதில்லை. கீழ்மட்டத்திலுள்ள மாணவர்களைப் பாதுகாப்பதும் கூட உங்களின் பொறுப்பாக இருக்கின்றது. எனவே கல்விச் செயலர் என்பவர் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற மாணவர்களைக் கவனிப்பது மட்டுமே தனது பொறுப்பு என்று கருதி விடக் கூடாது. அது மட்டும் அவருடைய பொறுப்பு அல்ல.

மாறாக, கல்விச் செயலருடைய பணி என்னவென்றால், ஆரம்பக் கல்வியிலிருந்து உயர்நிலைக் கல்வி, அதற்கு மேற்பட்ட படிப்புகள் மற்றும் பல்கலைக்கழகக் கல்வி வரை ஒவ்வொரு வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கும் சரியான வழிகாட்டல்களை வழங்குவதும் அவர்களைப் பாதுகாப்பதும், சிறு வயதிலிருந்தே அவர்களுக்குப் படிப்பதன் பக்கம் கவனமூட்டுவதும் அவர்களை உற்சாகப்படுத்துவதும் ஆகிய இந்த அனைத்து பணிகளும் கல்வி செயலரின் பணியாக இருக்கின்றது.

குறிப்பாக எந்த மாணவர்களுடைய பெற்றோர்கள் படித்தவர்களாக இல்லையோ அவர்கள் தங்களின் குழந்தைகள் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஜமாஅத்தும் அந்த குழந்தைகள் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும். எனவே கல்விச் செயலரும் சரி, ஜமாஅத் தலைவரும் சரி, அல்லது செயற்குழு உறுப்பினராக இருந்தாலும் சரி, அவர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறு கவனம் செலுத்தினால் அடுத்த தலைமுறை மிகச் சிறந்த தலைமுறையாக இருக்கும்.

எனவே இப்போதுள்ள நிலைமைகளைப் பற்றி மட்டும் நீங்கள் சிந்திக்காதீர்கள். மாறாக, வருங்காலத் தலைமுறை பற்றிய கவலை உங்களுக்கு இருக்க வேண்டும்.

பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

நான் இதற்கு முன்னரும் கூறியிருக்கின்றேன். சில கிருத்தவ பிரிவுகளில் நாம் பார்க்கின்றோம். அங்கு பெண்கள் அதிகமாகப் படித்தவர்களாக இருக்கின்றார்கள். அவ்வாறிருந்தும் கூட அவர்கள் தம்மை விடக் குறைந்த படிப்பறிவுள்ள இளைஞர்களைத் திருமணம் செய்து கொள்கின்றார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால்,

தங்களுடைய தலைமுறை அழிந்து விடக்கூடாது என்பதற்காக அவர்கள் செய்கின்றார்கள். எனவே நமது இளம் பெண்களும் கூட தியாகம் செய்ய வேண்டும். இளைஞர்களும் முன்னரை விட அதிகமாக படிப்பதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். நான் குறிப்பிட விரும்புகின்ற முதல் விஷயம் இங்கு படிப்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக இருக்கின்றன.

எனவே அதிலிருந்து அவர்கள் பயன்பெற வேண்டும். அவர்கள் வெறுமனே சுற்றித் திரிவதற்குப் பகரமாக, படிப்பதன் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும். குத்தாமுல் அஹ்மதிய்யாவும் தர்பிய்யத் துறையும் இதன் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அதாவது இளைஞர்கள் வேலையின்றி வெறுமனே சுற்றித் திரிகின்ற பழக்கத்தை முடிவிற்குக் கொண்டு வர முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் அவர்களை முழுமையாகப் பாதுகாக்க முடியும். அவ்வாறு அவர்களைப் பாதுகாப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

பிறகு இளைஞர்கள் இளம் பெண்களுக்கு எதிராகப் புகார்கள் கூறுகின்றனர். அவ்வாறே இளம் பெண்கள் இளைஞர்களுக்கு எதிராகவும் புகார்கள் கூறுகின்றனர். மெதுமெதுவாக இந்த பிரச்சனைகள் அதிகரித்து வருகின்றன.

இவர்களைப் பாதுகாப்பதற்காக முறையாக நீங்கள் திட்டம் தீட்டாமல் இருந்தால், தீட்டிய திட்டங்களுக்கு ஏற்ப செயல்படாமல் இருந்தால் பிறகு இந்த பிரச்சனைகள் மேலும் அதிகரித்துக் கொண்டே செல்லும்.

பிறகு வக்ஃபே ஜதீது செயலர் அவர்கள், வக்ஃபே ஜதீது சந்தாவில் கலந்து கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கை 28,680 என்று கூறினார்கள்.

பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

இந்த எண்ணிக்கையை இன்னும் அதிகரிக்க வேண்டும். குறிப்பாக, புதிதாக பைஅத் செய்தவர்களை இந்த திட்டத்தில் பங்கு பெறச் செய்ய வேண்டும்.

*(தொடரும் - இன்ஷா அல்லாஹ்...)*

## காதியானில் 124 -வது ஆண்டு மாநாடு

**ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் காதியானில் நடைபெறும் 124 –வது ஆண்டு மாநாடு 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28, 29, 30 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள்.**

**ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்டு அதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!**

**இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும், நல்ல ஆன்மாக்கள் நேர்வழி பெறுவதற்குக் காரணமாக அமைவதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா.**

**(நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாது மர்கஸிய்யா, காதியான்)**

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் டிசம்பர் 2014 ஆண்டு பத்ர் பத்திரிகையின் சிறப்பு வெளியீட்டின் போது வழங்கிய தூதுச் செய்தி

இந்த பத்திரிகை ஜமாஅத்தின் ஆன்மீகச் சீர்திருத்தம் மற்றும் முன்னேற்றத்திற்காகத் தொடங்கப்பட்டது. மேலும் நமது முன்னோர்கள் நெருக்கடியான சூழ்நிலைகள் இருந்தும் கூட தமது உயிரை அர்ப்பணித்தவாறு இப்பத்திரிகையை தொடர்ந்து இயங்கி வரும்படி செய்துள்ளனர்.

மேலும் அவர்களுடைய துஆக்கள் மற்றும் தூய முயற்சிகளின் அருளால் தான் இன்று வரை இது தொடர்ந்து வெளி வந்து கொண்டிருக்கின்றது என்ற இவ்விஷயத்தை பத்ர் துறையும், பத்ர் பத்திரிகையின் வாசகர்களும் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். மேலும் அதிகம் அதிகமான அஹ்மதிகள் இதைப் படிக்க வேண்டும். மேலும் இதிலிருந்து பலன் பெற வேண்டும் என்பதை இவ்விஷயமானது நம்மிடம் எதிர்பார்க்கின்றது.

அல்லாஹ் தனது அருளால் இந்திய அஹ்மதிகளுக்குக் குறிப்பாகவும், மற்ற நாடுகளில் வசிக்கக்கூடிய அஹ்மதிகளுக்குப் பொதுவாகவும் இதைப் படிப்பதற்கும், இதனோடு தொடர்புள்ள அருள்களைச் சேகரிப்பதற்குமான நல்வாய்ப்பினை வழங்குவானாக. ஆமீன்.

## இஸ்லாமிய வரலாற்றில் மகத்துவமிக்க ஒரு காட்சி

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கூற்றிலிருந்து....

கிப்பன் ஒரு புகழ்பெற்ற கிறித்தவ வரலாற்று ஆசிரியராக இருந்தார். அவர் ரோமானியர்களின் நிலைமை தொடர்பாக ஒரு வரலாற்று நூலை எழுதியுள்ளார். அவர் அந்த நூலில் அலிஃப் அர்ஸிலான் அவர்களின் மகனான மலிக் ஷா தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்:

மலிக் ஷா இளைஞராக இருந்த சமயத்தில் அவரது தந்தையார் மரணித்து விட்டார். தந்தையார் மரணமடைந்ததும் மலிக் ஷாவின் சிறிய தகப்பனாரின் மகனும் அவரது ஒன்றுவிட்ட சகோதரரும் மலிக் ஷாவிற்கு எதிராக நாங்கள் தான் அரசாட்சியில் இருப்போம் என்று வாதம் செய்ய ஆரம்பித்தனர். இதன் காரணமாக உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.

நிஸாமுத்தீன் தவ்ஸி என்பவர் மலிக் ஷாவின் அமைச்சராக இருந்தார். அவர் (ஷியாவாக இருந்த காரணத்தால்) மலிக் ஷா அவர்களை இமாம் மூஸா ரிஸா (ரலி) அவர்களின் கப்ரில் துஆ செய்வதற்காக அழைத்துச் சென்றார். துஆ செய்த பிறகு மலிக் ஷா தனது அமைச்சரிடம் நீங்கள் என்ன துஆ செய்தீர்கள்? என்று கேட்டார். அதற்கு அமைச்சர், இறைவன் உங்களுக்கு வெற்றியைத் தர வேண்டும் என துஆ செய்தேன் என பதிலளித்தார். அப்போது மலிக் ஷா அவர்கள் இவ்வாறு கூறினார்கள். நான் இறைவனிடம் இவ்வாறு துஆ செய்தேன்.

**“என் இறைவா ! எனது சகோதரன் முஸ்லிம்கள் மீது ஆட்சி செய்வதற்கு என்னை விட அதிகமாக தகுதியுடையவனாக இருந்தால் நீ இன்று என்னுடைய உயிரைப் பறித்து விடு. எனது சிம்மாசனத்தை என்னிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொள்”.**

கிப்பன் ஒரு கிறித்தவ வரலாற்று ஆசிரியராக இருந்ததால் முஸ்லிம்கள் மீது மிகவும் காழ்ப்புணர்வு கொண்டவராக இருந்தார். ஆனால் இந்த சம்பவத்தைக் குறிப்பிட்டு விட்டுத் தன்னையும் அறியாமல் அவர் இவ்வாறு எழுதுகின்றார்.

**“துருக்கிய (முஸ்லிம்) இளவரசரின் இந்தக் கூற்றை விட மிகவும் தூய்மையான விரிவான கண்ணோட்டத்திலுள்ள சொற்களை வரலாற்று ஏடுகளின் பக்கங்களில் தேடுவது கடினமானதாகும்”**

(இஸ்லாம் கா இக்திஸாதி நிஸாம், அன்வாருல் உலூம் தொகுதி 18 பக்கம் 10)

EDITOR
O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 30 August 2018 Issue No. 35

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

போக்குள்ளவர்களாக ஆக்கிவிடுகிறது. மேலும் இறைவனது ஆட்சி பூமியில் உருவாகாதவரை அவனைப் பூமியில் உதவி புரியத் தகுதியுள்ளவனாகவும் அவர்கள் கருதுவதில்லை.

இதற்கு மாறாக, இறைவன் திருக்குர்ஆனில் முஸ்லிம்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கும் துஆவானது ஆட்சி பறிக்கப்பட்டவர்களைப் போல் இறைவன் பூமியின் மீது செயல் அற்றுப் போனவன் அல்லன் என்றும் மாறாக அவனது பண்புகளான ரூபூபிய்யத், ரஹ்மானிய்யத், ரஹீமிய்யத் மேலும் அவனது அதிகாரங்கள் அனைத்தும் பூமியில் நடந்து வருகிறன்றன என்றும் தன்னை வழிபடுகிறவர்களுக்கு அவன் உதவி புரிய வல்லமையுடையவன் என்றும் தீயவர்களைத் தனது தண்டனையால் அழிக்கக் கூடியவன் என்றும் எடுத்துரைக்கிறது. அந்த துஆ இதுவாகும்:

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ-

اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ- الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ- مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ- اِیَّاکَ نَعۡبُدُ وَاِیَّاکَ نَسۡتَعِیۡنُ-

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ- صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ

غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَلَا الضَّآلِّیۡنَ

அதாவது எல்லா புகழுக்கும் உரிமையானவன் இறைவனேயாவான். அவனது ஆட்சியில் எந்தக் குறைபாடும் இல்லை. மேலும் அவனது சிறப்புகளிலிருந்து ஏதாவது கிடைப்பதற்கு இன்று இல்லை. நாளைதான் கிடைக்கும் என எதிர்பார்க்கும் நிலை இல்லை. அவனது ஆட்சிக்குத் தேவைப்படும் பொருள்களில் எதுவும் செயல்பட முடியாமலில்லை. அனைத்து உலகங்களையும் பரிபாலித்து வருகிறான்.

அவன் எவ்வித முயற்சியுமின்றி அருட்கொடையை வழங்குகின்றான். மேலும் முயற்சியின் பிரதிபலனாகவும் அருட்கொடையை வழங்குகின்றான். நன்மை தீமைகளின் பிரதிபலனையும் தக்க சமயத்தில் வழங்குகிறான். நாம் அவனையே வணங்குகிறோம். அவனிடமே உதவி தேடுகிறோம். மேலும் எல்லா அருட்கொடைகளின் பாதைகளையும் நீ எங்களுக்குக் காட்டித் தருவாயாக. கோபம், வழிகேடு இவற்றின் பாதைகளிலிருந்து நீ எங்களைத் தூரமாக்குவாயாக என்று துஆ செய்கிறோம்.

திருக்குர்ஆனில் முதல் அத்தியாயமாக விளங்கும் சூரா ஃபாத்திஹாவில் இடம் பெற்றிருக்கும் இந்த துஆவானது பைபிளின் புதிய ஏற்பாட்டில் வந்திருக்கும் துஆவிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். ஏனெனில் இறைவனது ஆட்சி பூமியில் தற்போது இருக்கிறது என்பது புதிய ஏற்பாட்டில் மறுக்கப்பட்டுள்ளது.

ஆகவே புதிய ஏற்பாட்டின் அடிப்படையில் பூமியில் இன்னும் இறைவனது ஆட்சி வராததால் அவனது பண்புகளாகிய ரூபூபிய்யத், ரஹ்மானிய்யத், ரஹீமிய்யத், நன்மை, தீமைகளுக்குப் பிரதிபலன் அளிக்கும் வல்லமை ஆகியவை பூமியில் செயல்படவில்லை. ஆனால் பூமியில் இறைவனது ஆட்சி இருந்து வருவதாக சூரா ஃபாத்திஹா மூலம் தெரிய வருகிறது. இதன் காரணத்தாலேயே ஆட்சிக்கு வேண்டிய எல்லாத் தேவைகளும் சூரா ஃபாத்திஹாவில் விளக்கப்பட்டுள்ளது.

ஓர் அரசனிடத்தில் இந்தப் பண்புகள் காணப்பட வேண்டும் என்பது வெளிப்படையான ஒரு விஷயமாகும். அதாவது, அவன் மக்களைப் பரிபாலிப்பதில் வல்லமையுடையவனாய் இருக்க வேண்டும். ஆகவே சூரா ஃபாத்திஹாவில் ரப்புல் ஆலமீன் என்னும் சொல்லைக் கொண்டு இந்த பண்பு நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

அரசனிடத்தில் இருக்க வேண்டிய மூன்றாவது பண்பு என்னவெனில் குடிமக்கள் தங்களது வேலைகளைத் தங்களது முயற்சியால் நிறைவேற்ற முடியாவிட்டால் அவை நிறைவேறும் பொருட்டு தகுந்த உதவிகளை அளித்தலாகும். ஆகவே ரஹீம் என்னும் சொல்லைக் கொண்டு இந்த பண்பு நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

அரசனுக்கு வேண்டிய நான்காவது பண்பு என்னவெனில் அரசு நிர்வாகத்தில் எவ்வித இடையூறும் உண்டாகாமலிக்க நன்மை தீமைகளுக்குரிய பிரதிபலன் அளிக்க வல்லமையுள்ளவனாய் இருத்தலாகும். ஆகவே மாலிகி யவ்முத்தீன் என்னும் சொல்லைக் கொண்டு இந்த பண்பு நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

சுருக்கமாக, மேலே குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரமானது, ஆட்சிக்கு வேண்டிய எல்லாத் தேவைகளையும் வெளிப்படுத்தியிருக்கிறது. இவைகளிலிருந்து பூமியில் இறைவனது ஆட்சியும் அவ்வாட்சிக்குரிய அதிகாரங்களும் இருந்து வருவதாக நிரூபணமாகிறது. ஆகவே அவனது பண்புகளாகிய ரூபூபிய்யத், ரஹ்மானிய்யத், ரஹீமிய்யத், உதவி அளித்தல், தண்டனை அளித்தல் ஆகிய அனைத்தும் இருந்து வருகின்றன.

சுருக்கமாக, ஆட்சிக்குத் தேவைப்படுபவை எல்லாம் பூமியில் இறைவன் புறமிருந்தே வருகின்றன. ஒவ்வோர் அணுவும் அவனது கட்டளைக்கு அப்பாற்பட்டதன்று. ஒவ்வொன்றின் பிரதிபலனும் அருட்கொடையும் அவன் கையிலேயே இருந்து வருகிறது.

இதற்கு மாறாக பைபிளின் புதிய ஏற்பாடானது இறைவனது ஆட்சி இன்னும் உங்களிடையே வரவில்லை என்றும் அது வருவதற்கு இறைவனிடம் பிரார்த்தனை செய்யுமாறும் போதிக்கிறது. அதாவது, அவர்கள் இறைவன் இதுவரை பூமிக்கு உரிமையாளனாகவும் இல்லை; அரசனாகவும் இல்லை. ஆகவே இப்படிப்பட்ட இறைவனிடமிருந்து என்ன நம்பிக்கை வைக்க முடியும்?

கேளுங்கள்! புரிந்து கொள்ளுங்கள்! மிகப் பெரும் இறைஞானம் என்னவென்றால், வானத்தின் ஒவ்வோர் அணுவும் இறைவனது ஆளுமையில் இருந்து வருவதைப் போல் பூமியிலுள்ள ஒவ்வோர் அணுவும் அவ்விறைவனது ஆட்சியின் பிடியிலேயே இருந்து வருகிறது. மேலும் வானத்தில் மகத்துவமான ஒரு தோற்றம் இருப்பது போல் பூமியிலும் மகத்துவமான ஒரு தோற்றம் இருக்கவே செய்கிறது.

வானத்திலுள்ள தோற்றம் என்பது ஈமான் (எனும் இறை நம்பிக்கை) உடன் சம்பந்தப்பட்ட ஒன்றாகும். சாதாரண மனிதன் எவனும் வானத்திற்குச் செல்லவுமில்லை; அதைக் கண்டதுமில்லை. ஆனால் பூமியில் நடந்து வரும் இறைவனது ஆட்சியின் தோற்றத்தை வெளிப்படையாக ஒவ்வொரு மனிதனும் தன் கண்களால் பார்க்க முடிகிறது.

(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 37–40)

### ஈத் ஃபண்ட் சந்தா தொடர்பான அறிவிப்பு

இந்த சந்தா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திலேயே நிறுவப்பட்டதாகும். இந்த ஃபண்டின் நோக்கம் என்னவென்றால், மனிதன் எங்கு தமது சுய மகிழ்ச்சிக்காக ஆடைகளை வாங்குவது, உணவு உண்பது மற்றும் பிறருக்கு அன்பளிப்புகளை வழங்குவது போன்ற பல்வேறு விஷயங்களுக்காகச் செலவு செய்கின்றாரோ அங்கு இந்த மகிழ்ச்சியில் மார்க்கத்தின் நோக்கங்களையும் நினைவு கூற வேண்டும் என்பதாகும்.

இந்த நோக்கத்திற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபாக்கள் அதிகம் அதிகமாகச் சந்தா கொடுத்துள்ளனர். இந்த மாதம் ஹஜ்ஜுப் பெருநாள் வர இருக்கின்றது. எனவே சஹாபாக்களை நடைமுறையைப் பின்பற்றியவாறு ஜமாஅத் உறுப்பினர்களிடம் ஈத் ஃபண்டில் அதிகம் அதிகமாகப் பங்கெடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். ஈது ஃபண்ட் தொகையை ஈத் பெருநாள் தொழுகைக்கு முன்பாக எப்போது வேண்டுமானாலும் கொடுக்கலாம். இந்த சந்தா மேலிடத்திற்குரியதாகும். முழுத் தொகையையும் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவில் செலுத்துவது அவசியமாகும். இத்தொகையிலிருந்து உள்ளூர் தேவைக்காக செலவு செய்வதற்கு அனுமதி கிடையாது. (நாஸிர் பைத்துல் மால் காதியான்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad